**அல்லாஹ்வின் கட்டளை**

وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ وَتُدْلُوْا بِهَآ اِلَى الْحُكَّامِ لِتَاْكُلُوْا فَرِيْقًا مِّنْ اَمْوَالِ النَّاسِ بِالْاِثْمِ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ

**பொருள்**

**நீங்கள் உங்கள் செல்வத்தை உங்களுக்கிடையே தவறான முறையில் விழுங்கி விடாதீர்கள். நீங்கள் தெரிந்து கொண்டே மக்களின் செல்வத்தின் ஒரு பகுதியினை தகாத முறையில் விழுங்கி விட வேண்டும் என்பதற்காக அதை அதிகாரிகளிடம் இழுத்துச் செல்லாதீர்கள்.**

**(2: 189)**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 10

இதழ் 19

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - துல்கஅதா 09 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - ஹிஜ்ரத் 08★ 08 மே 2025


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## மன்றாடல் மற்றும் எப்படிப்பட்ட மறைவான வாள் இருந்தது என்றால் அது கொலை செய்வதற்காக உடன்படிக்கை செய்து வந்திருந்த உமர் போன்ற மனிதரை தனது தாக்கத்தால் வீழ்த்தி விட்டது அந்த கவனம் மற்றும் மன்றாடலில் எப்படிப்பட்ட வாள் இருக்கின்றது என்றால் அது கூர்மையான வாளைக் காட்டிலும் அதிகமாக பணி செய்கின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பாருங்கள்! எந்த அளவுக்கு பயன் ஏற்பட்டது! ஒரு காலத்தில் இவர்கள் ஈமான் கொண்டிருக்கவில்லை. மேலும், நான்கு வருடம் தாமதம் செய்தார்கள். அதில் என்ன இரகசியம் இருந்தது? என்பதை அல்லாஹ் நன்கறிவான். இறைத் தூதர் (ஸல்) அவர்களை கொலை செய்து விடக் கூடிய ஒரு நபரை தேட வேண்டும் என்று அபூ ஜஹல் தேடிக் கொண்டிருந்தான். அந்நேரத்தில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பெரும் வீரராகவும், தைரியசாலியாகவும் இருந்தார்கள். மேலும் கம்பீரம் படைத்தவராக இருந்தார்கள். (நிராகரிப்பாளர்களாகிய) அவர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் ஆலோசனை செய்து இறைத் தூதர் (ஸல்) அவர்களை கொலை செய்ய வேண்டும் என்று உறுதி எடுத்திருந்தார்கள். மேலும், உடன்படிக்கையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், அபூ ஜஹலும் கையொப்பமிட்டிருந்தனர். உமர் கொலை செய்துவிட்டு வந்தால் இவ்வளவு பணம் (அவருக்கு) வழங்கப்படும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அல்லாஹ்வின் வல்லமை இவ்வாறாக இருந்தது. அதாவது ஒரு காலத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஷஹீதாக்குவதற்காக சென்ற அந்த உமர் (ரலி) - மற்றொரு நேரத்தில் அதே உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தில் இணைந்து சுயமே ஷஹீதாகிவிடுகின்றார்கள். அது எப்படிப்பட்ட விநோதமான காலமாக இருந்தது!

சுருக்கமாக, நான் கொலை செய்து வருகின்றேன் என்று அந்நேரத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த எழுத்திற்கு பிறகு, அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடுவதில் ஈடுபட்டார்கள். எங்கேயாவது தனியாக கிடைத்தால் நான் அவரை கொன்று விடுவேனே! என்று இரவுகளில் அன்னார் (ரலி) சுற்றித் திரிந்து வந்தார்கள். அன்னார் (ஸல்) தனியாக எங்கே இருப்பார்கள்? என்று அன்னார் (ரலி) மக்களிடம் விசாரித்தார்கள். அப்போது, பாதி இரவு கழிந்த பிறகு கஅபத்துல்லாஹ்வில் சென்று அன்னார் (ஸல்) தொழுது வருகின்றார்கள் என்று மக்கள் கூறினர். இதைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். எனவே அன்னார் (ரலி) கஅபத்துல்லாஹ்விற்கு (முன்னரே) சென்று ஒளிந்து கொண்டார்கள். சிறிது நேரம் கழிந்தபோது, காட்டிலிருந்து لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்ற குரல் வந்தது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குரலாக இருக்கின்றது என்பது தெரிய வந்தது. அந்தக் குரலை செவியுற்று அது இங்கேதான் வந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து கொண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மேலும் எச்சரிக்கையாகி ஒளிந்து கொண்டார்கள். மேலும், அன்னார் ஸஜ்தாவிற்கு செல்லும்போது அன்னாரை வாளால் தலையை உடலிலிருந்து துண்டித்து விடலாம் என்று எண்ணம் கொண்டார்கள். அன்னார் (ஸல்) வந்தவுடனேயே தொழத் தொடங்கிவிட்டார்கள். பின்னர் அதன் பிறகு நிகழ்ந்த சம்பவத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே எடுத்துரைக்கின்றார்கள்.இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸஜ்தாவில் எந்த அளவிற்கு அழுது அழுது துஆக்கள் செய்தார்கள் என்றால் நான் நடுங்கிவிட்டேன். எதுவரையென்றால்,

سَجَدَ لَكَ رُوْحِيْ وَجَنَانِيْ

என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பொருள்: எனது எஜமனனே! எனது ஆன்மாவும், எனது உள்ளமும் கூட ஸஜ்தா செய்துள்ளது!

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த துஆக்களைக் கேட்டு இதயம் துண்டு துண்டாக ஆகிக் கொண்டிருந்தது. இறுதியில் எனது கையிலிருந்து உண்மையின் அச்சத்தின் காரணமாக வாள் கீழே விழுந்து விட்டது. இவர் உண்மையாளர் ஆவார். மேலும் நிச்சயமாக வெற்றி பெற்றுவிடுவார் என்பதை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த நிலையிலிருந்து புரிந்து கொண்டேன். ஆயினும், நஃப்ஸே அம்மாரா (தீமையின் பக்கம் சாய்க்கும் ஆன்மா) தீயதாக இருக்கின்றது. அன்னார் (ஸல்) தொழுது முடித்து விட்டு புறப்பட்டபோது, நான் பின்தொடர்ந்து சென்றேன். அன்னார் அறிந்திருந்த அந்த காலடி ஓசையைக் கேட்டார்கள். இரவில் இருள் சூழ்ந்திருந்தது; யார் அது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். உமர் என்று நான் கூறினேன். உமரே! நீரோ இரவிலும் பின்தொடர்வதை விடுவதில்லை ; பகலிலும் விடுவதில்லை.

அந்நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மாவின் நறுமணம் வந்தது. அந்நேரத்தில், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு எதிராக துஆ செய்வார்கள் என்று எனது ஆன்மா உணர்ந்தது. ஹஸ்ரத்! எனக்கு எதிராக துஆ செய்து விடாதீர்கள் என்று நான் வேண்டினேன்.

அந்த நேரமும், அந்த தருணமும் எனது இஸ்லாத்திற்கானதாக இருந்தது. எதுவரை என்றால், நான் முஸ்லிமாக ஆகிவிடுவதற்கு இறைவன் எனக்கு நற்பேறு வழங்கிவிட்டான். அழுகை மற்றும் மன்றாடலில் எப்படிப்பட்ட மறைவான வாள் இருந்தது என்றால் அது கொலை செய்வதற்காக உடன்படிக்கை செய்து வந்திருந்த உமர் போன்ற மனிதரை தனது தாக்கத்தால் எவ்வாறு வீழ்த்தி விட்டது! என்பதை சிந்தியுங்கள். அந்த கவனம் மற்றும் மன்றாடலில் எப்படிப்பட்ட வாள் இருக்கின்றது என்றால் அது கூர்மையான வாளைக் காட்டிலும் அதிகமாக பணி செய்கின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 64 -65, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அருளுக்குரிய ரமலான் மாதத்தையொட்டி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின்**

**ஒளியில் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொன்னான அறிவுரைகள்**

நான் என் ஜமாஅத்துக்குப் பலமுறை கூறியிருக்கின்றேன். நீங்கள் என்னிடம் செய்துள்ள இந்த பைஅத்தை மட்டுமே முழுமையாக நம்பி இருந்து விடாதீர்கள். அவற்றின் உண்மைத்துவம் வரை நீங்கள் சென்றடையாத வரை உங்களுக்கு ஈடேற்றம் கிடையாது
(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

நமது ஜமாஅத் அல்லாஹ்வின் ஆதரவின் கீழ் இருக்கிறது. துன்பத்தை மேற்கொள்வதால் ஈமான் வலுப்பெற்று விடுகின்றது. பொறுமையைப் போன்றது எதுவும் இல்லை
அஹ்மதி ஒருவருக்குத் தன்னுடைய நற்செயல்களை செய்வதற்கு மிகவும் அவசியமானது என்னவென்றால், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். யோசிக்க வேண்டும்
நீங்கள் உங்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்றால், நன்மைகளை செய்வதில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தவில்லை என்றால், அல்லாஹ்வை வணங்குவதற்கான உத்வேகத்தையும், உயர் நல்லொழுக்கத்தைக் காட்டுவதற்கான உத்வேகத்தையும் உருவாக்கவில்லை என்றால், பிறகு என் பைஅத்தில் வந்ததற்கு எந்தப் பயனும் இல்லை
அவன் தன் அடியார்களை ஏதாவது ஒரு விதத்தில் காப்பாற்றி விடுகின்றான். ஒருவர் கூட நல்லவர் என்றால், அவருக்காக மற்றவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள் என்பதே இறைவனின் நடைமுறையாகும் -
(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 மே 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அமான்** மாதம் **28 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்லாஹ் இந்த ரமலானைக் கழிப்பதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்கினான். இன்று இந்த ரமலானின் கடைசி ஜுமுஆ ஆகும். அல்லாஹ் நம்மில் பலருக்கு இறை வணக்கங்கள் செய்வதற்கான நல்வாய்ப்பு வழங்கினான்; நோன்பு வைப்பதற்கும் நல்வாய்ப்பு வழங்கினான். இது அவன் நம் மீது புரிந்த பேருளாகும். ஆனால் அத்துடன் நாம் இந்த விஷயத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது ரமலானின் நோன்புகளை வைத்ததனாலும் இறை வணக்கங்கள் செய்ததனாலும் மட்டும் ரமலானில் நம் நோக்கம் நிறைவேறிவிடவில்லை ; மாறாக, நீங்கள் நிரந்தரமாக என்னை வணங்கும் அடியார்களாக ஆக வேண்டும்; என்னை வணங்குவதற்கான உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று இறைவன் நமக்கு அறிவுரை வழங்கி இருக்கின்றான்; வழிகாட்டல் வழங்கி இருக்கின்றான்.

எனவே இந்த நாள்களில் எவர்களுக்கு தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துவதற்கு நல்வாய்ப்பு கிடைத்ததோ ஜமாஅத்தான தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கு நல்வாய்ப்பு கிடைத்ததோ நஃபில்கள் தொழுவதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கு நல்வாய்ப்பு கிடைத்ததோ, அல்லாஹ் அவர்களுக்கு அதன்படி அமல் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்கியிருந்தானோ இப்பொழுது இந்த நன்மைகளைத் தொடர்வது அவர்களுடைய கடமையாகும்.

நாம் இந்த நன்மைகளைத் தொடர்ந்தால்தான் அல்லாஹ் ஒரு மனிதனின் படைப்பின் நோக்கமாகக் கூறிய அந்த நோக்கத்தைப் பெறக் கூடியவர்களாக நாம் ஆக முடியும். இந்தக் காலத்தில் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரின் கையில் பைஅத் செய்து இந்த உறுதிமொழியைப் புதுப்பித்துள்ளோம். எனவே இதன்படி அமல் செய்வதற்காக நாம் இப்பொழுது நமது முழு முயற்சியைத் தொடர வேண்டும். இன்றும் ரமலானின் மீதமிருக்கும் 2,3 நாள்களில் அல்லது 2 நாள்கள் உள்ளனவென்றால், அவற்றிலும் அல்லாஹ் நமக்கு இந்த ரமலானின் அருளால் நாம் அல்லாஹ்வின் கட்டளையின் பேரில் நிறைவேற்றி வந்த அந்த நன்மைகளை இனியும் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும், நாம் ரமலானுக்குப் பிறகு இந்த நன்மைகளை மறந்து விடக் கூடாது என்றும் துஆ செய்ய வேண்டும்.

ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைத்தான் கூறியுள்ளார்கள்: எவர் ஒருவர் நம்பிக்கையாளராக இருக்கின்றாரோ அவருக்கு ஒரு தொழுகையில் இருந்து இன்னொரு தொழுகை வரை கவலை இருக்கின்றது. ஒரு ஜுமுஆவில் இருந்து இன்னொரு ஜுமுஆ வரை கவலை இருக்கின்றது. ஒரு ரமலானில் இருந்து இன்னொரு ரமலான் வரை கவலை இருக்கின்றது. அதாவது, அவர் அவை வர வேண்டும்; பிறகு நான் அந்த இறை வணக்கத்தை நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் செய்யுமாறு கட்டளையிட்டுள்ள அந்த நன்மைகளையும் இதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நான் நிறைவேற்ற வேண்டும் என்றும், அதற்கு இடைப்பட்ட காலத்தில் (நிகழ்ந்த) சின்னச் சின்ன தவறுகளுக்கும், பாவங்களுக்கும் இந்த இறை வணக்கங்கள் பரிகாரமாகிவிட வேண்டும் என்றும் காத்துக் கொண்டிருக்கின்றார். இவை பரிகாரமாகி விடுகின்றன என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுத் தஹாரத், பாபுஸ் ஸலாத், ஹதீஸ் எண்: 233)

எனவே எப்படி ரமலான் முக்கியத்துவம் வாய்ந்ததோ அதேபோன்று ஒவ்வொரு தொழுகையும், ஒவ்வொரு ஜுமுஆவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ரமலானுடைய கடைசி ஜுமுஆ என்றால் அது அருளுக்குரியதாகும் என்பதன்று. ஒவ்வொரு ஜுமுஆவும் அருளுக்குரியதாகும். நான் கூறியது போன்று, இந்தக் காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். நமக்கு அன்னாரை ஏற்றுக் கொள்வதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. எவ்வாறு நீங்கள் உண்மையான முஸ்லிம் ஆக முடியும்? எவ்வாறு உண்மையான முறையில் அல்லாஹ்வின் அப்த் (அடியாராக) ஆக முடியும்? எவ்வாறு மாநபி (ஸல்) அவர்களின் உம்மத்தின் நபராக ஆக முடியும்? என எண்ணற்ற அறிவுரைகளை அன்னார் தமது ஜமாஅத்துக்கு வழங்கியுள்ளார்கள்.

எனவே இந்த விஷயங்களை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஒரு தருணத்தில் அன்னார் (அலை) அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்: நான் என் ஜமாஅத்துக்குப் பலமுறை கூறியிருக்கின்றேன். நீங்கள் என்னிடம் செய்துள்ள இந்த பைஅத்தை மட்டுமே முழுமையாக நம்பி இருந்து விடாதீர்கள். அவற்றின் உண்மைத்துவம் வரை நீங்கள் சென்றடையாத வரை உங்களுக்கு ஈடேற்றம் கிடையாது.

(பழத்தின்) தோலில் திருப்தி கொள்பவர் சத்திலிருந்து இழப்பிற்குரியவராக இருக்கிறார். அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

சீடர் சுயமே செயல்படக் கூடியவர் இல்லையென்றால், பீருடைய சான்றோர் தன்மை அவருக்கு எந்தப் பலனையும் அளிப்பதில்லை. நான் இன்ன பீரிடம் பைஅத்

செய்து விட்டேன்; ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து விட்டேன்; இப்பொழுது எனக்கு நிறைய கிடைத்துவிட்டது என்று சொன்னால், அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இல்லை. இது நடக்க முடியாது. நாம் சுயமே செயலாற்றக் கூடியவர்களாக ஆகாத வரை நமக்கு இந்த பைஅத் எந்த பலனையும் எட்ட வைக்க முடியாது.

இதற்கான எடுத்துக்காட்டு இவ்வாறாகும் என்று அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

எடுத்துக்காட்டாக, ஒருவர் ஒரு மருத்துவரிடம் செல்கிறார்; அவர் மருத்துவக் குறிப்பை வழங்குகிறார். இவர் அந்த மருத்துவக் குறிப்பை வாங்கி வைத்து விடுகிறார் என்றால், இதனால் எந்தப் பலனும் ஏற்படாது. அந்த மருத்துவரின் மருத்துவக் குறிப்பிலிருந்து அல்லது அந்த மருத்துவரின் மருத்துவக் குறிப்பிலிருந்து பயன் பெறும்போதுதான் அதை வைத்து சிகிச்சை செய்து கொள்ளும்போதுதான், அந்த மருந்துகளைப் பயன்படுத்தும் போதுதான் பலன் ஏற்படும்.

எனவேதான் அன்னார் (அலை) இவ்வாறு கூறுகிறார்கள்: நான் கிஷ்தீ நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற ஒரு நூலை எழுதி இருக்கின்றேன். அந்த கிஷ்தீ நூஹ் நூலை மீண்டும் மீண்டும் படியுங்கள். இதில் உங்களுக்கு அறிவுரைகள் இருக்கின்றன. இதை நீங்கள் மீண்டும், மீண்டும் படிக்கும்பொழுதுதான் அறிவுரைகள்படி செயல்படும்பொழுதுதான் உங்களுடைய வாழ்வை அதற்கு ஏற்ப அமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யும் பொழுதுதான், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகளுக்கு ஏற்ப இதில் பதியப்பட்டுள்ள கட்டளைகளைப் பார்க்கும் பொழுதுதான், உங்களுக்கு வெற்றிகரமான வாழ்வு அமையும். அந்த விஷயம்தான் உங்களுக்கு பைஅத்தில் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அல்லாஹ்வோ தூய்மை ஆனவர் வெற்றி பெற்று விட்டார் என்று கூறுகின்றான். .

قَدْ أَفْلَحَ مَنْ زَكَّٰهَا

அதாவது, தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தியவர் நோக்கத்தை பெற்று விட்டார். இதன்படி நீங்கள் செயல்படும்போதுதான் உங்களுக்குப் பலன் ஏற்படும்.

அன்னார் (அலை) எடுத்துக்காட்டு வழங்கியவாறு கூறுகிறார்கள்:

ஆயிரக்கணக்கான திருடர்கள், விபச்சாரிகள், தீய நடத்தை உடையவர்கள், மது அருந்துபவர்கள் தீய வாழ்க்கை வாழ்பவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் வாதம் புரிகின்றார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் அப்படித்தானா? அவர்கள் ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தீகள் என்று அழைக்கப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்களா?

அன்னார் (அலை) கூறினார்கள்: ஒருபோதும் இல்லை; அவர்கள் (அவ்வாறு) ஆக முடியாது. மாநபி (ஸல்) அவர்களின் போதனைகளின்படி முழுமையாக செயல்படுபவர்தான் உம்மத்தீ ஆவார். (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 233 - 234 1984-ம் ஆண்டு பதிப்பு)

போதனைகளின் படி செயல்படவில்லை என்றால், பிறகு அவர் உம்மத்தீ என்று அழைக்கப்பட முடியாது. இதுவே மாநபி (ஸல்) அவர்களுக்கு அவப் பெயர் ஏற்படுத்தும் விஷயமாகும்.

எனவே இந்த விஷயங்களை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நாம் நம்முடைய அமல்களை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். அவை அல்லாஹ்வுடைய கட்டளைகள் ஆகும். அவற்றைக் குறித்து மாநபி (ஸல்) அவர்கள் நமக்கு வழிகாட்டல் வழங்கியிருக்கின்றார்கள். இந்தக் காலத்தில் அவற்றின் பக்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கவனமூட்டியிருக்கின்றார்கள்.

அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இந்த ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றீர்கள் என்றால், இதன் போதனைப்படி செயல்படுங்கள். ஜமாஅத்தில் இணைந்த பிறகு இன்னல்களும் வந்து சேர்கின்றன. இன்னல்கள் வந்து சேரவில்லை என்றால், பிறகு எப்படி நற்கூலி சாத்தியமாக முடியும்?

அன்னார் (அலை) கூறினார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் 13 ஆண்டுகள் வரை துன்பங்களை சகித்துக் கொண்டார்கள். அந்தக் காலத்துத் துன்பங்கள் என்னவாக இருந்தன? என்பது உங்களுக்குத் தெரியவே தெரியாது.

எனவே எப்பொழுதும் நினைவிற் கொள்ளுங்கள். துன்பங்கள் வரத்தான் செய்கின்றன. ஆனால், மக்காவில் இந்தத் துன்பங்கள் ஸஹாபா பெருமக்களுக்கும், மாநபி (ஸல்) அவர்களுக்கும் ஏற்பட்டுக் கொண்டிருந்த போது, அப்பொழுதும் பெருமானார் (ஸல்) அவர்கள் பொறுமை காக்குமாறு போதனை வழங்கினார்கள். இதற்கு என்ன விளைவு ஏற்பட்டது? விளைவு என்ன ஏற்பட்டதென்றால், கடைசியில் எதிரி அழிந்துபோய் விட்டான். நீங்கள் பார்ப்பீர்கள் ; உங்களை எதிர்க்கக் கூடிய இந்தத் தீய மக்களும் அந்தக் காலத்தில் தென்பட மாட்டார்கள்.

இன்றைய நாள்களிலும் இதே நிலைமைகள் தான் இருக்கின்றன. இந்த ஜமாஅத்தை உலகத்தில் பரப்ப அல்லாஹ் நாடிவிட்டான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்த மக்கள் உங்களை (எண்ணிக்கையில்) குறைவானவர்களாகக் கண்டு துன்பம் கொடுக்கின்றார்கள். ஆனால், ஜமாஅத் அதிகரித்து விடும் பொழுது இவர்கள் தாமாகவே அமைதியாகி விடுவார்கள். இதுதான் உலகத்தில் விதியாக இருந்து வந்துள்ளது. இதைத் தான் நபிமார்களின் ஜமாஅத்தின் வரலாறாக நாம் பார்த்து வருகின்றோம்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் நாடியிருந்தால் இந்த மக்கள் துன்பம் கொடுத்திருக்க முடியாது. துன்பம் கொடுப்பவர்கள் பிறந்திருக்க மாட்டார்கள். ஆனால், இறைவன் இவர்கள் மூலமாக பொறுமைக்கான போதனையை வழங்க




விரும்புகிறான்.

அல்லாஹ் எல்லா ஆற்றல்களுக்கும் சொந்தக்காரன் ஆவான். அவனால் இந்த அநியாயக் காரர்களின் கைகளைத் தடுக்க முடியும். ஆனால், நம்மில் எவ்வளவு பொறுமை இருக்கின்றது; நாம் அல்லாஹ்வுடன் எவ்வளவு தொடர்பை ஏற்படுத்துகிறோம் என்று அவன் நம்மையும் சோதிக்க விரும்புகின்றான். நாம் ரமலான் நாள்களில் மட்டுமே அல்லாஹ்விற்காக இறை வணக்கங்களை மேற்கொண்டு இருக்கின்றோமா? நாம் நிரந்தரமாக நம்முடைய வாழ்வில் இந்த இறை வணக்கங்களை நம்முடைய வாழ்வின் அங்கமாக ஆக்க விரும்புகிறோமா? அவ்வாறு ஆக்கி கொண்டிருக்கின்றோமா? இது இல்லை என்றால், பிறகு ஒன்றுமே இல்லை. நாம் இதை செய்கிறோம் என்றால் பிறகு பொறுமையுடன் அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தியாகவும் உள்ளோம்; துஆக்களும் செய்து வருகிறோம் என்றால் அல்லாஹ் எதிரிகளிடமிருந்து நம்மைக் காப்பாற்றவும் செய்வான். அல்லாஹ் உங்களை இந்த இன்னல்களிலிருந்து எப்படி காப்பாற்றுவான் என்பதை பிறகு நீங்கள் பார்ப்பீர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: பொறுமையும் ஓர் இறைவணக்கம் ஆகும். இறைவன் கூறுகின்றான்: பொறுமை காக்கக் கூடியவர்களுக்கு எப்படிப்பட்ட வெகுமதிகள் கிடைக்கும்? என்றால், அவற்றிற்குக் கணக்கே இல்லை. அதாவது அவர்கள் மீது கணக்கற்ற அருட்கொடைகள் பொழியும். இந்த நற்கூலி பொறுமையாளர்களுக்கு மட்டுமே ஆகும். மற்ற இறை வணக்கங்களுக்கு அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி இல்லை. ஒரு நபர் ஒருவரது ஜமாஅத்தில் வாழ்வைக் கழிக்கும்போது, அவருக்கு துன்பத்திற்கு மேல் துன்பம் ஏற்படும்போது, கடைசியில் ஆதரவு அளிப்பவனுக்குத் தன்மானம் பொங்குகிறது. அவன் துன்பமிழைக்கக் கூடியவரை அழித்து விடுகின்றான்.

அதாவது நாம் பொறுமை காக்கும்போது, அவனுக்கு முன்னால் குனியும்போது துஆக்கள் செய்யும்போது பிறகு அல்லாஹ்வின் தன்மானம் பொங்கி எழும். மக்கள் சிலர் பொறுமையின்மையைக் காட்டி விடுகிறார்கள். சரிதான்; சில இடங்களில் அதிகம் துன்பம் இழைக்கப்படுகின்றனதான். குறிப்பாக பாகிஸ்தானில், ஆனால், அல்லாஹ் நம்மிடம் இதைத்தான் எதிர்பார்க்கின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு பொறுமை காத்திடுங்கள் என்பதைத்தான் கூறியிருக்கின்றார்கள்.

நாம் இந்த ரமலானில் துஆக்கள் செய்து விட்டோம் என்பது மட்டுமல்ல. மாறாக, நாம் இந்த துஆக்களையும் இந்த நற்செயல்களையும் நம் வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆக்கிக் கொண்டால்தான் நமக்குப் பயனும் ஏற்படும். அன்னார் (அலை) மிகவும் அறுதியிட்டு இவ்வாறு கூறினார்கள்;

நமது ஜமாஅத் அல்லாஹ்வின் ஆதரவின் கீழ் இருக்கிறது. துன்பத்தை மேற்கொள்வதால் ஈமான் வலுப்பெற்று விடுகின்றது. பொறுமையைப் போன்றது எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 235, 1984-ம் ஆண்டு பதிப்பு)

ஆக, இந்த விஷயங்களை நாம் நினைவில் கொண்டால், இன்ஷா அல்லாஹ் முன்னேறிக் கொண்டே செல்வோம். எதிரியால் நம்முடைய பணிகளில்

ஒருபோதும் எந்த இடையூறும் விளைவிக்க முடியாது. நம்முடைய திட்டங்களில் ஒருபோதும் எந்தத் தடையையும் ஏற்படுத்த முடியாது. ஆனால், நம்முடைய செயல்கள் நல்ல செயல்களாக இருக்க வேண்டும்; நாம் ஒவ்வொன்றையும் இறைவனைத் திருப்தி படுத்துவதற்காக செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் நிபந்தனை ஆகும்.

ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: இப்பொழுது நீங்கள் உலகத்தின் பக்கம் சாய்ந்தவர்களாக இருக்காதீர்கள். மாறாக, இறைவன் பக்கம் திரும்பி விடுங்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 71, 1984-ம் ஆண்டு பதிப்பு)

நீங்கள் இறைவன் பக்கம் திரும்பிவிடும்போது, பிறகு அல்லாஹ் உங்களுக்கு எப்படி எளிமைகளை ஏற்படுத்துகிறான் என்று பாருங்கள்!

பிறகு அன்னார் (அலை) இறையச்சத்தைப் பற்றி அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: வரலாறு இதைக் கூறுகிறது. அதாவது, துவக்கத்தில் உண்மையான முஸ்லிமாக இருப்பவர் பொறுமை காக்க வேண்டி வருகிறது. ஸஹாபா பெருமக்களுக்கும் இதே போன்ற காலம் வந்தது. அப்பொழுது அவர்கள் இலைகளை சாப்பிட்டு வாழ்வை கழித்தார்கள். சிலவேளை ரொட்டித் துண்டு கூட கிடைக்காமல் இருந்தது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இறைவன் நன்மை செய்திடாத வரை எந்த மனிதரும் யாருடனும் நன்மை செய்திட முடியாது. அல்லாஹ் நன்மை செய்ய நாடினால்தான் மனிதர்கள் தரப்பில் இருந்தும் நன்மைகள் நடக்கின்றன. மனிதன் இறையச்சத்தை மேற்கொள்ளும் பொழுது, பிறகு இறைவன் அவருக்காக கதவுகளைத் திறந்து விடுகின்றான். மக்கள் உங்களுக்கு நன்மை செய்வார்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், (நன்மை) ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ் இப்பொழுது நாடவில்லை என்றால், நீங்கள் லட்சம் (முறை) முயற்சிகள் செய்தாலும் மக்களால் உங்களுக்கு நன்மை செய்ய முடியாது. நன்மையில் (முன்னேறிச்) செல்வதற்கு அல்லாஹ்வின் பக்கம் குனிவது அவசியம் ஆகும். அவன் திருப்தி அடையும்போது, நாம் இறையச்சத்தின்படி செல்லத் துவங்கும்போது, பிறகு அல்லாஹ் தனது அருளின் கதவுகளையும் திறப்பான். இன்ஷா அல்லாஹ்!

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது உண்மையான ஈமான் கொள்ளுங்கள். அவனிடமிருந்து அனைத்தும் கிடைக்கப் பெறும். ஏனெனில், அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

مَنْ يَتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا
وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 204 1984-ம் ஆண்டு பதிப்பு)

பொருள்: எவர் அல்லாஹ் மீது தக்வாவை மேற்கொள்கிறாரோ அல்லாஹ் அவருக்காக ஏதாவது வழியை ஏற்படுத்தி விடுவான். அவர் கற்பனை கூட செய்து பார்த்திராத இடத்திலிருந்து அவருக்கு வாழ்வுக்குத் தேவையானவற்றை வழங்குவான். அவர் எதிர்பார்த்திடாத இடத்தில் இருந்து அவருக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவான். ஆக, நாம் நம்முடைய வாழ்வை வெற்றிகரமானதாக ஆக்க வேண்டும் என்றால், மேலும் இந்த ரமலானின் அல்லது ஒவ்வொரு ரமலானின் அருள் ஆக இருக்கும். அந்த அருளிலிருந்து நாம் பலன் பெற வேண்டுமென்றால், இந்த விஷயங்களை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

பிறகு அடியார்களுக்கான உரிமைக்காகவும், அன்னார் (அலை) இவ்வாறு கூறுகிறார்கள்: ஒருவர் மற்றவருடன் சேர்ந்து அமர்ந்திடுங்கள். எந்த அளவு நீங்கள் ஒருவர் மற்றவரை நேசிப்பீர்களோ அந்த அளவே அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான்.

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 228, 1984-ம் ஆண்டு பதிப்பு)

இப்பொழுது இறை வணக்கங்கள் என்பது வெளிப்படையான இறை வணக்கங்கள் மட்டுமல்ல ; மாறாக ரமலான் நாள்களில் உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துவதன் பக்கம் நமக்கு ஏற்பட்ட கவனம் - பல மக்களுக்கு ஏற்படுகிறது; சொல்லவும் செய்கிறார்கள். இப்பொழுது இந்த உயர் நல்லொழுக்கங்களை நாம் எப்பொழுதும் தொடரவும் செய்ய வேண்டியது அவசியமாகும்.

சின்னச் சின்ன விஷயங்களில், சின்னச் சின்ன சண்டைகளில், சின்னச் சின்ன பிரச்சனைகளில் ஒருவர் மற்றவரோடு கருத்து வேறுபாடுகள் உருவாகி விடுகின்றன. அவற்றை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அன்பு நேசத்தின் வாழ்வை வாழ வேண்டும். ஆக, நாம் இதனை செய்யும் பொழுது பிறகு அல்லாஹ்வுடைய அருள்களின் மழையும் நம் மீது பொழியும்.

பிறகு ஓரிடத்தில் அன்னார் (அலை) அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: நமது ஜமாஅத் இந்த அமளி நிறைந்த காலகட்டத்தில், எல்லா இடத்திலும் வழிகேடு, கவனக்குறைவு மற்றும் வழிதவறுதல் எனும் காற்று வீசிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பாருங்கள்! இன்றைய காலத்தில் வழிகேட்டின் பக்கம் அழைத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்படாத எந்த வழிமுறைகள்தான் இருக்கின்றன! எல்லா வகையான முயற்சியும் நடக்கிறது. எல்லா வகையான ஊடகமும் இப்பொழுது இந்த வேலையிலேயே ஈடுபட்டுள்ளது. உலக வாதிகள் எல்லா வழிகளையும் வழிகேடு, வழிதவறுதல் மற்றும் கவனக்குறைவு ஆகியவற்றின் பக்கம் அழைத்துச் செல்வதற்கும், அல்லாஹ்வை விட்டு தொலைவில் அழைத்துச் செல்வதற்கும் பயன்படுத்தத் துவங்கி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில், இந்தக் காலத்தில் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக (தோன்றிய) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று வாதம் புரியும் நம்முடைய வேலை என்னவென்றால், நான் இந்த விஷயங்களில் இருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்மில் எத்தனை பேர் இவற்றில் இருந்து தவிர்ந்திருக்கிறோம் என்று சுயமே ஆய்வு மேற்கொள்ளுங்கள். இளைஞர்களும் பெரிய வயதுடையவர்களும் பெண்களும், குழந்தைகளும் என ஒவ்வொருவரையும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: உலகின் நிலை என்ன? என்றால், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மகத்துவம் இல்லை. உரிமைகள் பற்றியும், வலியுறுத்திக் கூறப்பட்டவை பற்றியும் அவர்களுக்குக் கவலை இல்லை. அல்லாஹ் என்ன அறிவுரைகளை வழங்கியிருக்கின்றான்? என்பதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. உலகத்திலும், அதன் வேலைகளிலும் அளவுக்கதிகமாக மூழ்கி இருக்கிறார்கள்.

நாம் நம்முள் ஆய்வு செய்தால், நம்மிடமும் இதே விஷயங்கள்தான் இருக்கின்றன. அதாவது, உலகப் பணிகளில் அதிகம் மூழ்கி இருக்கின்றோம். சிலவேளை நாம் தொழ மறந்து விடுகின்றோம். சிலர் ஜுமுஆக்களைப் பொருட்படுத்துவதில்லை. சிலர் வேறு நன்மைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. தம் உரிமையைப் பெறுவதற்காக பிறரது உரிமையைப் பறிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள்.

ஆக, இந்த விஷயங்கள் எப்படிப்பட்டவை என்றால், இவை பிறகு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரக் கூடியவையாக இருக்க முடியாது. ஆக, ஒரு பக்கம் நாம் ரமலானில், அல்லாஹ்வே! எங்களுக்கு நன்மைகள் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவாயாக! எங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவாயாக! என்று துஆக்கள் செய்து கொண்டிருப்போம். பிறகு நாமும் அல்லாஹ் நமக்குக் கூறிய விஷயங்கள் படி செயல்பட வேண்டும். முயற்சியும் செய்ய வேண்டி வரும். வெறும் துஆவால் வேலை நடக்காது.

அன்னார் (அலை) கூறினார்கள்: உலக வாதத்தில் மூழ்கிய மக்களாக இருக்கின்றார்கள். உலக ரீதியில் இழப்பு ஏற்பட்டால் மிக அதிகமாக கூச்சலிடத் துவங்கி விடுகின்றார்கள். அழுது புலம்பவும், கதறவும் ஆரம்பித்து விடுகிறார்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று, உலகத்தின் இழப்பில் இருந்து தப்பிப்பதற்காக அல்லாஹ்விற்கான உரிமைகளை வீணடித்துவிடுகின்றார்கள். அதாவது, நமக்கு உலக இழப்பு ஏற்படக் கூடாது. அல்லாஹ்வுக்கான உரிமைகள் நிறைவேற்றப்பட்டாலும் நிறைவேற்றப்படாவிட்டாலும் அவர்களுக்கு எந்த வித்தியாசமும் ஏற்படுவதில்லை. அல்லாஹ் கூறிய விஷயங்கள் பக்கம் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. மக்களுக்கான உரிமைகளை நிறைவேற்றுவதில்லை. வழக்குத் தொடுப்புகளில் சென்று விடுகின்றார்கள். தவறான வகை வழக்குகள் இருக்கின்றன. பிறகு ஒருவர் மற்றவரைத் தாழ்த்திக் காட்டுவதற்காக மக்கள் இவ்வாறும் செய்து கொண்டிருப்பார்கள். அதாவது பொய்ச்சான்றுகளை வழங்கிக் கொண்டிருப்பார்கள். வழக்கறிஞர்கள் கூறுவதன் அடிப்படையில், தவறான சாட்சிகளை எடுத்து வைத்துக் கொண்டிருப்பார்கள்.

வக்கீல்களும் பொய்யான ஆதாரங்களைக் கொடுக்க வைப்பதற்கு முயற்சி செய்கின்றார்கள். பொய் சாட்சிகளை முன்வைத்துக் கொண்டிருப்பார்கள். ஆக, இப்படிப்பட்ட நிலையில் பிறகு எப்படி

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அல்லாஹ் நமக்கு தோள் கொடுப்பது சாத்தியமாகும். அல்லாஹ்வின் உதவியைப் பெற வேண்டுமென்றால், பிறகு நாம் நன்மைகளின் பக்கம் கவனம் செலுத்துவதும், அல்லாஹ்வின் கட்டளைகள்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்வதும் அவசியமாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: பலவீனமாக இருக்கும் வரை பாவம் செய்யத் துணிச்சல் இருப்பதில்லை. பலவீனமாக இருக்கும் வரை பாவம் செய்ய மாட்டார்கள். அல்லாஹ்வின் பக்கம் திரும்புபவர்களாக இருப்பார்கள். சந்தர்ப்பம் கிடைத்ததும், பிறகு உடனடியாக பொய் மற்றும் பாவங்களை செய்யத் துவங்கி விடுகிறார்கள். எளிமைகள், வசதிகள் ஏற்படும் பொழுது, பிறகு அல்லாஹ் நமக்கு எளிமைகளையும் வசதிகளையும் வழங்கி இருக்கின்றான் என்பதையும், இதற்கு முன்பு நம் நிலை எப்படி இருந்தது என்பதையும் மறந்து விடுகிறார்கள். பலவீனத்தில் நம்முடைய நன்மைகளாக இருந்த அந்த நன்மைகளை நாம் தொடர்வதுதான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது ஆகும்.

அல்லாஹ் மற்றும் அவனுடைய அடியார்களுக்கான உரிமைகளைப் பறிப்பதற்கு ஒருபோதும் முயற்சி செய்யக் கூடாது. உரிமையைப் பறிக்கிறோம் என்றால், உண்மையான இறையச்சம் இல்லை என்பதே அதற்குக் காரணம் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: உண்மையான இறையச்சம் இருந்தால் பிறகு மனிதன் இப்படிப்பட்ட செய்கைகளை செய்யவே முடியாது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: நபிமொழிகளில் பல பகுதிகள் இருக்கின்றன. பரக்கத்துகளும் இருக்கின்றன. ஆனால், உள்ளத்தில் ஈமானும், அமல் நிலையும் முற்றிலும் இல்லை. மக்கள் சிலர் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் பற்றி பேசுகிறார்கள்தான்; ஆனால், அமல் நிலையும் ஈமானும் இந்த விஷயங்கள்படி அமல் செய்யும் அளவுக்கு இல்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த விஷயங்கள் மீண்டும் உருவாக வேண்டும் என்பதற்காகவே இறைவன் என்னைத் தோற்றுவித்தான். களம் காலியாக இருப்பதை இறைவன் பார்த்தபோது, அவனுடைய இறைத் தன்மையின் எதிர்பார்ப்பு இந்தக் களம் காலியாக இருப்பதையும், மக்கள் இப்படியே விலகி இருப்பதையும் ஒருபோதும் விரும்பவில்லை. இப்பொழுது அல்லாஹ் அவர்களுக்கு எதிரில் உயிருள்ளவர்களின் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறான். எனவே இறையச்சத்தின் வாழ்வு கிடைக்கப் பெற வேண்டும் என்பது எமது தப்லீஃக் ஆகும்.

ஆக, நாம் புதிய சமுதாயமாக ஆகி இருக்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்துள்ளோம் எனும் போது, நாம் இறையசத்தின் வாழ்வில் நடக்க வேண்டி வரும்; நடக்கவும் வேண்டும்.

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறையச்சம் என்பது நாவால் மட்டும் மனிதனுக்குக் கிடைத்து விடக் கூடிய ஒன்று கிடையாது. மாறாக, ஷைத்தான் வழிகெடுக்கின்றான். இறையச்சம் மேற்கொள்வர்களையும் வழிகெடுக்கின்றான். ஷைத்தான் கெடுக்கின்றான்.

அதற்கான எடுத்துக்காட்டு என்னவென்றால், அன்னார் (அலை) இவ்வாறு எடுத்துக்காட்டு கூறியுள்ளார்கள்: சிறிதளவு இனிப்பை வைத்து விட்டால் அதில் எண்ணற்ற எறும்புகள் வந்து விடுகின்றன. எங்கேயாவது இனிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. சர்க்கரை வைக்கப்பட்டிருக்கிறது. இனிப்புப் பலகாரம் வைக்கப்பட்டுள்ளது என்றால் அதில் எறும்புகள் வந்து விடுகின்றன. இதே நிலைதான் ஷைத்தானிய தீமைகளுடையதும் ஆகும். இதன் மூலமாக மனிதனுடைய பலவீனமான நிலை பற்றி, மனிதனின் பலவீனமான நிலை என்ன என்று தெரிய வருகின்றது. நான் மிகவும் நல்லவன் ஆகிவிட்டேன்; பெரிதும் இறையச்சத்தின்படி அமல் செய்கிறேன் என்று நினைக்கிறான். ஆனால், ஷைத்தான் தாக்குதல் தொடுத்து விடுகிறான். அப்பொழுது ஷைத்தானின் தாக்குதலிலிருந்து நீ தப்பியிருக்கவில்லை. நீ இன்னும் முழுமையாக அல்லாஹ்வின் பாதுகாப்பில் வரவில்லை என்று அவனுக்குத் தெரியவருகிறது.

அன்னார் (அலை) கூறினார்கள்: இறைவன் நாடியிருந்தால் மனிதன் இதுபோன்ற பலவீனத்தைக் கொண்டிருக்க மாட்டான். நான் கூறியது போன்று, ஒருவர் சிறிதளவு நன்மை செய்துவிட்டு நான் இறையச்சத்தின்படி அமல் செய்யக் கூடியவனாக ஆகிவிட்டேன் என்று கருதுகிறார்.

ஆக, இதுவோ உண்மையான இறையச்சம் கிடையாது. இது எப்படிப்பட்ட இறைச்சம் என்றால், இதன்மீது ஷைத்தான் தாக்குதல் தொடுக்கின்றான். அன்னார் வழங்கிய எடுத்துகாட்டு போன்றே தாக்குதல் தொடுக்கின்றான். அதாவது இனிப்பில் எறும்புகள் வந்து விடுகின்றன. அவ்வாறே ஷைத்தானும் அவனைத் தூண்டி விடுவதற்காக நீ பெரும் நல்லவனாகி விட்டாய் என்று அவனுடைய சிந்தனையில் போடுவதற்காக தாக்குதல் தொடுத்து விடுகின்றான்.

மனிதனின் நிலை இப்படி ஆகிவிடும்போது, பிறகு அவன் நன்மைகளை விட்டு விலகிச் சென்று விடுகின்றான். ஆணவம் உருவாகி விடுகின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஆக, இறையச்சத்தின்படி செல்லக்கூடியவர்கள் மிகவும் பார்த்து, பார்த்து காலெடுத்து வைக்க வேண்டியிருந்தது. ஒவ்வோர் ஆற்றலின் தலையூற்று இறைவன் தான் என்ற விஷயம் மனிதனுக்குத் தெரியும் போதுதான் இது சாத்தியப்பட முடியும். எந்த நபிக்கும் ரஸூலுக்கும் தம்மிடமிருந்து ஆற்றலை வழங்குவதற்கான ஆற்றல் கிடையாது. எனினும், நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்களிடமிருந்து அருள்கள் கிடைக்கப் பெறுகின்றன.

அவர்களுடைய போதனைப்படி செயல்படுவதால் பரக்கத் கிடைக்கிறது. ஆனால், ஆற்றல் அல்லாஹ்விடமே இருக்கிறது. நபிமார்களும், ரஸூல்மார்களும் கூட அல்லாஹ்விடம் கேளுங்கள் என்பதன் பக்கமே அழைத்துச் செல்கிறார்கள். இந்த ஆற்றலே இறைவன் தரப்பில் இருந்து மனிதனுக்குக் கிடைக்கும் பொழுது அவனிடம் மாற்றம் ஏற்படுகின்றது. அதைப் பெறுவதற்காக துஆவுடன் செயல்படுவது அவசியமாகும்.

தொழுகை மட்டுமே எத்தகைய ஒரு நன்மை என்றால் அதன் காரணமாக ஷைத்தானிய பலவீனம் அகன்று விடுகின்றது. இதற்குப் பெயர்தான் துஆவாகும். மனிதன் இதில் மனிதன் பலவீனமானவனாக இருக்க வேண்டும் என்று ஷைத்தான் விரும்புகிறான். ஏனெனில், மனிதன் தன்னை எவ்வளவு சீர்திருத்திக் கொள்வானோ அதை அவன் இதே வழிமுறையின் மூலமாகவே செய்வான் என்பது (ஷைத்தானாகிய) அவனுக்குத் தெரியும். எனவே இதற்காக தூய்மையாவது, பரிசுத்தமாவது அவசியமாகும். மனிதனிடம் அசுத்தம் இருக்கும் வரை ஷைத்தான் அவனை நேசிக்கின்றான்.

(மல்ஃபூஸாத், தொகுதி 398, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே தூய்மையாவதற்கு, பரிசுத்தமாகுவதற்கு தொழுகைகள் நிபந்தனையாகும். தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவதற்கும், அதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கும், நஃபில்கள் பக்கம் கவனம் செலுத்துவதற்கும் இந்த ரமலானிலிருந்து பயனடைந்துள்ளோம்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நிரந்தரமாக ஷைத்தானிடமிருந்து தப்பிக்க வேண்டுமென்றால், இறையச்சத்தில் அடியெடுத்து வைக்க வேண்டுமென்றால், பிறகு இறைவணக்கங்கள் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்பதே அதற்கான நிபந்தனையாகும். நிறுத்தி நிதானமாக செய்யப்படுகின்ற, அல்லாஹ்வின் கட்டளைகள்படி செய்யப்படுகின்ற, எவ்வித பகட்டும் வெளிக்காட்டுதலும் இல்லாத இபாதத் ஆக அது இருக்க வேண்டும். இப்படிப்பட்ட இபாதத்கள் இருக்கும் பொழுது பிறகு மனிதன் எப்பொழுதும் ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பித்திருப்பான். அல்லாஹ்வின் அடைக்கலத்தில் இருப்பான்.

பிறகு அன்னார் (அலை) இறையச்சத்தைப் பற்றி இதையும் கூறினார்கள்: இறையச்சமுடையவராக ஆகுவதற்கு அவசியமானது என்னவென்றால், பெரிய விஷயங்களான விபச்சாரம், திருட்டு, உரிமைகளை செலுத்தாமல் இருத்தல், வெளிக்காட்டுதல், ஆணவம், ஏளனமாகக் கருதுதல், கருமித்தனம் ஆகியவற்றை விடுவதில் உறுதியாக இருக்க வேண்டும். தீயொழுக்கங்களை விட்டுத் தவிர்ந்திருந்து, அவற்றிற்கு நிகராக நல்லொழுக்கங்களில் முன்னேற வேண்டும். இந்த விஷயம் இறையச்சத்துக்கு அவசியமானதாகும்.

அதாவது பெரிய தீமைகளான தரம் தாழ்ந்து ஒழுக்கங்கள் மற்றும் மட்டமான விஷயங்கள் ஆகியவற்றில் இருந்து விலகியிருக்க வேண்டும். இவ்வளவு மட்டும் போதாது. மாறாக, இதற்கு நிகராக நல்லொழுக்கங்கள் உருவாக வேண்டும். பிறகுதான் உண்மையான இறையச்சம் ஆகும். தீமைகளை மட்டும் அகற்றிடாமல் நன்மைகளிலும், அடியெடுத்து வைப்பது அசல் விஷயமாகும். தீய ஒழுக்கங்களை முடிவுக்குக் கொண்டு வருவதும் நல்லொழுக்கங்களை மேற்கொள்வதும்தான் அசல் விஷயமாகும். தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பது மட்டும் இறையச்சம் கிடையாது. மாறாக, தீமைகளிலிருந்து தவிர்ந்திருந்து கொண்டு நன்மைகளை செய்வது இறையச்சம் ஆகும்.

பிறகு இதுபோக நன்மைகளில் வேற என்ன விஷயங்கள் இருக்கின்றன. மக்களுடன் பரிவுடன் பழகுவது, நல்ல மனநிலையைக் காட்டுவது, அனுதாபத்தோடு பழகுவது, இறைவனோடு உண்மையான நன்றியுணர்வு மற்றும் நன்றியைக் காட்டுவது, தொண்டுகளுக்கான மகாமே மஹ்மூதைத் தேடுவது, அல்லாஹ்வுக்கும் பிடித்ததும், புகழத்தக்கதுமான செயல்களை செய்வதற்கு மனிதனுக்கு நல்வாய்ப்பு கிடைக்கும் வகையில் முயற்சி செய்வது ஆகிய விஷயங்களால் மனிதன் இறையச்சமுடையவன் என்று

அழைக்கப்படுகிறான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த விஷயங்கள் மனிதர்களிடம் உருவாகிவிடும்போது, அந்த மக்களே இறையச்சம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: மக்கள் இப்படி ஆகிவிடும்போது, பிறகு அல்லாஹ் இத்தகைய மக்களுக்குப் பாதுகாவலனாக ஆகிவிடுகின்றான். ஏனெனில், அல்லாஹ்வே இவ்வாறு கூறுகின்றான்:

لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

பொருள்: அவர்களுக்கு எந்த அச்சமும் இருக்காது. அவர்கள் துயரம் அடையவும் மாட்டார்கள். பிறகு இன்னொரு இடத்தில் கூறுகிறான்.

وَهُوَ يَتَوَلَّى الصّٰلِحِيْنَ

பொருள்: மேலும் அவன் நற்செயல்புரிபவர்களுக்கே ஆதரவாளனாக ஆகின்றான்.

நபிமொழிகளில் இவ்வாறு வந்துள்ளது. அல்லாஹ் அவர்கள் பிடிக்கக் கூடிய அவர்களுடைய கைகள் ஆகிவிடுகின்றான்.அவர்கள் பார்க்கக் கூடிய அவர்களுடைய கண்கள் ஆகிவிடுகின்றான். அவர்கள் கேட்கக் கூடிய அவர்களுடைய காதுகள் ஆகிவிடுகின்றான். அவர்கள் நடக்கக் கூடிய அவர்களுடைய கால்கள் ஆகிவிடுகின்றான்.

ஒரு நபிமொழியில் இதுவும் உள்ளது. எவர் என் நேசரை எதிர்க்கின்றாரோ அவரிடம், என்னுடன் மோத ஆயத்தமாகி விடு! என்று நான் கூறுகின்றேன். பிறகு ஓரிடத்தில் கூறுகின்றான்:

ஒருவர் இறைவனின் நேசர் மீது தாக்குதல் தொடுக்கும்போது, ஒரு பெண் சிங்கத்திடமிருந்து யாராவது அதன் குட்டியைப் பறித்துக் கொண்டால் எப்படி அது கோபத்தால் பாய்ந்து வருமோ அதுபோன்று இறைவன் அவர் மீது பாய்ந்து வருகின்றான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இறைவனின் கருணையோ இவ்வாறே கிடைக்கிறது. மனிதனின் காலடி அல்லாஹ்வை நோக்கி முன்னேறும் போது, இறைவனின் காலடியும் முன்னேறுகிறது.

இறைவனின் கருணை ஒவ்வொருவரோடும் இருப்பதில்லை. எனவே எவர்கள் மீது இருக்கின்றதோ அது அவர்களுக்கு அடையாளமாகக் கூறப்படுகின்றன. மாநபி (ஸல்) அவர்களுக்கு எல்லாரையும் விட அதிகம் அடையாளங்கள் காட்டப்பட்டன. அன்னாரைத் தோற்கடிப்பதற்கு, தோல்வியுறச் செய்வதற்கு எதிரிகள் என்னென்ன முயற்சிகள் எல்லாம் செய்தார்கள். ஆனால், ஒன்றும் உதவவில்லை. எதுவரை என்றால், மாநபி (ஸல்) அவர்களைக் கொல்வதற்கும் சதித் திட்டங்களும் தீட்டப்பட்டன. ஆனால் இறுதியில் தோல்வி அடைந்தனர்.

அன்னார்(அலை) கூறுகிறார்கள்: உங்களுடைய உள்ளத்தில் இறைவன் மீதான நேசம் மற்றும் மகத்துவத்தின் தொடரைத் தொடரச் செய்யுங்கள். இதற்காக தொழுகையை விடப் பெரிய வேறு எந்த விஷயமும் இல்லை. அல்லாஹ்வுக்கு முன் உங்கள் நன்மைகளை எடுத்து வைப்பதும், அவனை வணங்குவதற்கான உரிமையை செலுத்துவதுமே அசல் விஷயம் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அதற்காக எல்லாவற்றையும் விட உயர்ந்த விஷயம் தொழுகை ஆகும்.

எனவே நாம் ரமலானைக் கடந்து வந்துள்ளோம். தொழுகைகளின் நிலையில் கடந்து வந்துள்ளோம். நன்மையின் வழிகளில் கடந்து வந்துள்ளோம். இப்பொழுது இவற்றைத் தொடர்வதும், அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்கு இவற்றை நிரந்தர வாழ்வின் அங்கமாக்குவதும் அவசியமாகும். இது அல்லாமல் வேறு வழியில்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்: நோன்புகளோ ஓர் ஆண்டுக்குப் பிறகு வருகின்றன. செல்வந்தருக்கு ஸகாத் கொடுக்க வேண்டி வருகின்றது. செல்வம் இருப்பவர் மீது ஸகாத் கடமையாகும். ஒவ்வொருவரும் ஸகாத் கொடுக்க வேண்டியது வருவதில்லை. அதுவும் ஒரு நன்மை தான். ஆனால், தொழுகையை ஒவ்வொரு தரத்தில் உள்ள நபரும் ஐவேளை நிறைவேற்ற வேண்டி வருகிறது. செல்வந்தரோ, ஏழையோ, பெரியவரோ, சிறியவரோ அவர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். அதை ஒருபோதும் வீணடித்து விடாதீர்கள். அதை மீண்டும் மீண்டும் தொழுதிடுங்கள்.

நான் எத்தகைய ஆற்றல் படைத்தவனுக்கு முன்னால் நிற்கின்றேன் என்றால், அவன் நாடினால் இப்பொழுது ஏற்றுக் கொள்வான் என்ற எண்ணத்துடன் தொழுதிடுங்கள். நான் அல்லாஹ்வுக்கு முன் நிற்கின்றேன். அவன் எத்தகைய ஆற்றல் படைத்தவன் என்றால், அவன் நாடினால் இப்பொழுது என் துஆவை ஏற்றுக் கொள்வான் என்ற உறுதியான ஈமான் இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: உலகின் மற்ற அரசர்களோ கருவூலங்களின் தேவையுடையவர்கள் ஆவர். கருவூலம் காலியாகி விடுமோ என்று அவர்களுக்கு கவலை இருக்கிறது. திவால் ஆகிவிடுமோ என்ற கவலையில் அவர்களுக்கு இருந்து வருகின்றது. அவர்களின் கருவூலங்களுக்கு செல்வம் வருகின்றது; நிறைகின்றது. ஆயினும், நாம் அவற்றை தாராளமாக செலவு செய்து கொண்டே சென்றோம் என்றால் பிறகு நம்முடைய கருவூலங்கள் காலியாகிவிடுமே என்ற கவலையும் அவர்களுக்கு இருக்கிறது.

இன்றைய காலத்தில் மேற்கத்திய நாடுகளில் தம்மைப் பெரும் செல்வந்தர்களாகக் கருதியவர்களின் நிலை இதேதான். நம்மிடம் நிறைய செல்வம் இருக்கிறது. ஒருபோதும் காலியாகாது என்று நினைத்து வந்தனர். ஆனால், ஒவ்வொருவரின் நிலைமையும் மிகவும் மோசமாக ஆகிக் கொண்டிருக்கின்றது. பொருளாதாரம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது. ரூபாய் மதிப்பு குறைகிறது. பவுண்ட் மதிப்பு குறைகிறது. டாலர் மதிப்பு குறைகிறது. ஒரு குழப்பம் உருவாகியுள்ளது. இவர்களுக்குக் கவலை வந்து விட்டது. அதனால்தான் இவர்கள் பல கட்டுப்பாடுகளையும் விதித்து விட்டார்கள். ஆனால், இறைவனுடைய கருவூலம் எப்பொழுதும் நிறைந்திருக்கிறது. மனிதன் அவனுக்கு முன்னால் நிற்கும் பொழுது உறுதியான நம்பிக்கை மட்டும்தான் தேவைப்படுகிறது. அல்லாஹ்விடம் எல்லா ஆற்றல்களும் இருக்கின்றன. அவனுடைய கருவூலங்கள் எப்பொழுதும் நிறைந்திருக்கின்றன. நிறைந்தே இருக்கும் என்ற உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த உறுதியான நம்பிக்கை இருக்கும் பொழுது பிறகு (மனிதன்) அவனிடம் கேட்கிறான்.

பிறகு துஆக்களை ஏற்றுக் கொண்டு அப்பொழுதே வழங்கி விடுவதற்கு அல்லாஹ்விடம் ஆற்றல்கள் இருக்கின்றன.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: மனிதனுக்கு, நான் அதிகமாகக் கேட்கக் கூடியவனும், மிக்க அறிந்தவனும், அனைத்தையும் அறிந்தவனும், எல்லாம் வல்லவனும் ஆனவன் முன்பு நிற்கிறேன். அவனுக்குக் கருணை ஏற்பட்டுவிட்டால் அது பெரும் கருணையாக இருக்கும் என்ற விஷயத்தில் உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும்; அவனிடம் துஆ செய்ய வேண்டும்.நம்பிக்கையிழத்தல் மற்றும் தப்பெண்ணம் கொள்ளுதல் ஒருபோதும் இருக்கக் கூடாது.

இவ்வாறு செய்தால் அந்த நிம்மதியை விரைவில் கண்டு விடுவார். மேலும், இறைவனின் மேலம் மேலும் அருள்கள் அதில் இணைந்து விடும். மனிதன் இத்தகைய நிலையை உருவாக்கினான் என்றால், பிறகு அல்லாஹ்வின் அருள்கள் கிடைக்கப் பெறும். சுயம் இறைவனும் கிடைப்பான்.

ஆக, இது வழிமுறையாகும். இதைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், அநீதியிழைக்கும் தீயவனின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், அவன் இறைவனைப் பொருட்படுத்தாமல் இருக்கின்றான். மகன் ஒருவன் தந்தையைப் பொருட்படுத்தவில்லை என்றால், நற்பேறு இல்லாத மகனாக இருந்தால், தந்தை அவனைப் பொருட்படுத்தாத போது, இறைவன் ஏன் பொருட்படுத்த வேண்டும்.

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: நமது ஜமாஅத் இறைவனுடன் உண்மையான தொடர்பை உருவாக்க வேண்டும். தமது ஈமானிய ஆற்றல்களை உறுதியான நம்பிக்கை வரை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காகவே நான் வந்துள்ளேன். இந்த நோக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால் பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்:

என்னிடம் பைஅத் செய்ததற்கு எந்தப் பயனும் இல்லை.

எனவே நாம் நம்முடைய நன்மைகளை அதிகரித்துக் கொண்டே செல்வதற்கே முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வுடன் சிறப்பான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே நமது வாழ்வின் நோக்கமாகும். இதுவே ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் நமக்குப் பலனளிக்கக் கூடிய விஷயம் ஆகும். இதுவே நம்மை பிரச்சனைகளிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் காப்பாற்றக் கூடியதாகும். இன்ஷா அல்லாஹ்! இதன் மூலமாகவே ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து அடைந்து அல்லாஹ் வாக்குறுதி அளித்த அந்த தரம் வரை சென்றடைந்து விடும்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பணிகளில் முதலாவதோ அல்லாஹ் மாநபி (ஸல்) அவர்களின் காலத்தில் காட்டிய அடையாளங்களின் தொடர்ச்சியாகவே

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இப்பொழுதும் அடையாளங்களைக் காட்டுகிறான் என்பதே ஆகும். தானே முன்னேற்றத்திற்கான அடையாளங்களைக் காட்டுகிறான். இப்பொழுதும் காட்டிக் கொண்டே செல்கிறான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ் நம்முடைய துஆக்களை செவியேற்கக் கூடியவன் ; அதற்கு பதிலும் அளிக்கின்றான் ; நம்முடன் அவனது உதவியும் இருக்கிறது என்பதை நிரூபிப்பதற்காக அல்லாஹ் இந்த அடையாளங்களைக் காட்டுகிறான்.

பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்: எனது வருகைக்கான இரண்டாவது நோக்கம், இறைவனுடன் அடியார்களுக்குத் தொடர்பை ஏற்படுத்துவது ஆகும். ஒரு செயலோ அல்லாஹ்வுடையதாகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஒரு செயலோ அல்லாஹ்வுடையதாகும். அதை அவன் மாநபி (ஸல்) அவர்களிடம் வாக்களித்திருந்தான். அதை அவன் வழங்குகிறான். இரண்டாவது, நாம் அவனுக்கு நன்றி செலுத்தும் அடியார்களாக ஆக வேண்டும்; அவனை வணங்குவதற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும் ; நம்முடைய ஈமானில் முன்னேறக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்ற பொறுப்பை அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கின்றான்.

இது நடக்கும்போதுதான் அல்லாஹ்வின் அருள்களை நாம் பெறுபவர்களாக ஆவோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வருவதில் நமது நோக்கமாக இருக்கின்ற அந்த பைஅத்தின் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆவோம்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நமது ஜமாஅத்திற்குத் தேவையான விஷயமாவது, அவர்களுடைய ஈமான் அதிகரிக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது உண்மையான உறுதியான நம்பிக்கையும், இறை ஞானமும் உருவாக வேண்டும். நற்செயல்களில் சலிப்பும், சோம்பேறித்தனமும் இருக்கக் கூடாது.

ஏனெனில், சோம்பேறித்தனம் இருந்தால், பிறகு ஒருவர் தஹஜ்ஜுத் தொழுவது என்ன? உளூ செய்வதும் கூட ஒரு துன்பமாக தென்படும். நற்செயல்களுக்கான ஆற்றல் உருவாகவில்லை என்றால், நன்மையில் ஒருவரை ஒருவர் முந்திச் செல்வதற்கான உத்வேகம் இல்லையென்றால், பிறகு எம்முடன் தொடர்பை ஏற்படுத்துவது பலனற்றதாகும். நீங்கள் உங்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்றால், நன்மைகளை செய்வதில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தவில்லை என்றால், அல்லாஹ்வை வணங்குவதற்கான உத்வேகத்தையும், உயர் நல்லொழுக்கத்தைக் காட்டுவதற்கான உத்வேகத்தையும் உருவாக்கவில்லை என்றால், பிறகு என் பைஅத்தில் வந்ததற்கு எந்தப் பயனும் இல்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்: நம்முடைய போதனைகளைத் தனது செயல் வழக்கமாக ஆக்கிக் கொள்பவர். தனது துணிவு மற்றும் முயற்சிக்கு ஏற்ப அதன்படி செயல்படுபவர்தான் நமது ஜமாஅத்தில் நுழைகிறார். ஆனால், எவர் பெயர் மட்டும் வைத்துக் கொண்டு போதனைகளின்படி செயல்படுவதில்லையோ அவர் நினைவில் கொள்ளட்டும். இறைவன் இந்த ஜமாஅத்தை ஒரு சிறப்பான ஜமாஅத் ஆக ஆக்க எண்ணியுள்ளான். எந்த நபரும் பெயர் எழுத வைப்பதனால் மட்டும் ஜமாஅத்தில் இருக்க முடியாது. அவருக்கு ஏதாவது ஒரு நேரம் எப்படிப்பட்டதாக வருகிறது என்றால், அவர் பேறிழந்த தன்மையால் பிரிந்து விடவும் முடியும். பிரிந்தும் விடுவார். எனவே இயன்ற அளவு உங்களுக்கு வழங்கப்படும் போதனைக்கு ஏற்ப உங்களுடைய அமல்களை ஆக்கிக் கொள்ளுங்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நற்செயல்கள் இறக்கைகளைப் போன்றவை ஆகும். நற்செயல்கள் இல்லாமல் மனிதன் ஆன்மிகப் படித்தரங்களை நோக்கி பறக்க முடியாது. பறவைகள் இறக்கைகளால் காற்றில் பறப்பது போன்று, அமல்களும் ஆன்மிக படித்தரங்களை உயர்த்துவதற்கு அவசியமானதாகும். அமல்கள் இருந்தால்தான் மனிதன் மேலே பறக்க முடியும். அல்லாஹ்வுக்கு அருகில் செல்ல முடியும். (இல்லையென்றால்) மனிதன் ஆன்மிகப் படித்தரங்களைப் பெற பறக்க முடியாது. அவற்றின் கீழ் அல்லாஹ் வைத்திருக்கும் அந்த உயர் நோக்கங்களைப் பெற முடியாது.

அன்னார் (அலை) கூறினார்கள் : பறவைகளிடம் புரிதல் இருக்கிறது. அவற்றிடம் புத்தி இருக்கிறது. அல்லாஹ் அவற்றின் படைப்பில் வைத்துள்ள அவற்றின் இயல்பில் வைத்துள்ள புத்தியையும் புரிதலையும் அவை பயன்படுத்தவில்லை என்றால் அவற்றால் நிகழும் பணிகள் நிகழாது.

எடுத்துக்காட்டாக, தேனீயிடம் புரிதல் இல்லையென்றால், அது தேனை எடுக்க முடியாது. இவ்வாறே தூதுப் புறாக்கள் இருக்கின்றன. தூதுச் செய்தியை எடுத்துச் செல்லும் புறாக்கள். அவை முன்னர் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவை தமது புரிதலை ஓரளவுக்குப் பயன்படுத்த வேண்டி வருகிறது. எவ்வளவு தொலைதூர சேருமிடங்களை அவை சென்றடைகின்றன. கடிதங்களைக் கொண்டு சேர்க்கின்றன. இவ்வாறே பறவைகளிடம் விநோத விநோதமான வேலைகள் வாங்கப்படுகின்றன.

ஆக, முதலில் அவசியமானது என்னவென்றால், மனிதன் தனது புரிதலைப் பயன்படுத்த வேண்டும். நாம் செய்யப்போகும் செயல் அல்லாஹ்வின் கட்டளைகளின் கீழ், அவனுடைய திருப்திக்காக இருக்கிறதா? இல்லையா? என்று சிந்திக்க வேண்டும். இதைப் பார்த்த பிறகு, புரிதலுடன் செயல்பட்ட பிறகு கைகளிடம் வேலை வாங்க வேண்டிய தேவை உள்ளது. பிறகு செயல்ரீதியில் தம் கைகளை அசைப்பது அவசியமாகும். முதலில் நான் இதை செய்ய வேண்டுமா? இது நன்மையான செயலா? இவற்றிற்கு நல்ல விளைவுகள் ஏற்படுமா? இவை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப இருக்கின்றனவா? இல்லையா? என்று சிந்திக்க வேண்டும். புத்தியைப் பயன்படுத்த வேண்டும்.அடுத்து, அதற்குப் பிறகு அதன்படி அமல் செய்ய வேண்டும்.

சோம்பேறித்தனமும், கவனக்குறைவும் காட்டக் கூடாது. எனினும், போதனை சரிதானா? என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

சிலவேளை போதனை சரியாக இருக்கிறது. ஆனால், மனிதன் தனது அறியாமையால், அறிவீனத்தால் அல்லது வேறு ஒருவருடைய தீங்கு விளைவித்தல் அல்லது தவறான கூற்றால் ஏமாற்றத்திற்கு ஆளாகி விடுகின்றான். இதுவும் நடந்து விடுகிறது. சிலவேளை ஷைத்தான் ஏமாற்றம் அளித்துச் சென்று விடுகின்றான். அந்தப் போதனை தொடர்பாகவே ஏமாற்றம் கிடைத்து விடுகிறது. புரிவது அவனுக்கு அவசியமாகும்.

எனவே அஹ்மதி ஒருவருக்குத் தன்னுடைய நற்செயல்களை செய்வதற்கு மிகவும் அவசியமானது என்னவென்றால், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். யோசிக்க வேண்டும். மனதில் எதுவும் இல்லாமல் யோசிக்க வேண்டும். முதலில் ஆய்வு செய்ய வேண்டும். பிறகு அதில் ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டும். துஆ செய்ய வேண்டும். பிறகு அமல் செய்ய வேண்டும். பிறகு நான் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற வேண்டும் என்பதே நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆக, நாம் இந்த விஷயங்களின்படி அமல் செய்பவர்களாக ஆகும்போதுதான் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போம்.

அடுத்து, ஓரிடத்தில் அன்னார் (அலை) நம்முடைய இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்துவதற்காக அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ்வை நேசிப்பதில் முழுமையாக பங்கு பெறுங்கள். அதனாலேயே உண்மையான ஓரிறைமை உருவாகும். அதற்காக எங்களுக்கு அல்லாஹ்வின் மீது நேசம் உள்ளது; அவனுடைய ஓரிறைமையை நாங்கள் நிலைநாட்ட விரும்புகிறோம்; என்று நீங்கள் ஒப்புதல் கூறுகின்ற அதே வேளையில் அதை உண்மைப்படுத்துவதும் அவசியமாகும். அதற்காக பின்னர் அல்லாஹ்வுக்கு முன் விழுவதும், அழுது புலம்புவதும் அவசியமாகும்.

இந்த விஷயங்கள் இருக்கும்போதுதான் நாம் உண்மையான ஓரிறைக் கொள்கையை நிறைவேற்றக் கூடியவர்களாகவும் அதன்படி செயல்படக்கூடியவர்களாகவும் அதைப் பரப்பக் கூடியவர்களாகவும் இருப்போம்.

(மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 187, 1984-ம் ஆண்டு பதிப்பு)

அல்லாஹ்வின் மீது நேசம் கொள்வதன் பொருள் என்ன? என்பதை விளக்கியவாறு அன்னார் (அலை) கூறினார்கள்.

இதுவே இதன் பொருளாகும். அதாவது உங்களுடைய பெற்றோர் உங்களுடைய துணைவியர் அதாவது மனைவி மற்றும் உங்களுடைய பிள்ளைகள் உங்களுடைய உயிர் ஆகிய அனைத்தின் மீதும் அல்லாஹ்வின் திருப்தியை முதன்மையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

ஆக, திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது:

فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ اَوْ اَشَدَّ ذِكْرًا

பொருள்: நீங்கள் உங்களுடைய தந்தைமார்களை நினைவு கூர்வது போன்று அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அதற்கும் மேலாக, அதை விடவும் அதிகமாகவும்

கடுமையான தரத்தின் நேசத்துடனும் நினைவு கூருங்கள்! (2:201)

அன்னார் (அலை) கூறினார்கள்: இங்கு இந்த விஷயமும் ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டியதாகும். வல்ல இறைவன் நீங்கள் இறைவனை தந்தை என்று அழைக்குமாறு கட்டளையிடவில்லை. மாறாக, கிறிஸ்தவர்களைப் போன்று உங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டு விடக் கூடாது என்று அவன் கற்றுக் கொடுத்திருக்கின்றான். எனவே உங்களுக்கு கிறிஸ்தவர்களைப் போன்று ஏமாற்றம் ஏற்பட்டுவிடக் கூடாது; இறைவனை தந்தை என்று அழைக்கக் கூடாது என்பதற்காக இதைக் கூறினான்.

பிறகு தந்தையை விடக் குறைவான தரத்தின் நேசமாகிவிட்டது என்று எவராவது ஒருவர் கூறினால், அந்த ஆட்சேபனையை அகற்றுவதற்காக

اَشَدَّ ذِكْرًا

என்ற சொல்லை வைத்துவிட்டான்.

اَشَدَّ ذِكْرًا

என்று இல்லாமல் இருந்திருந்தால் ஆட்சேபனை ஆகியிருக்க முடியும். ஆனால், இப்பொழுதோ அவன் அதைத் தீர்த்து விட்டான். அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: தந்தையை விட அதிகமாக நினைவு கூருங்கள்!

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: உண்மையான ஓரிறைமையை நிலைநாட்டுவதற்கு இறைவன் மீதான நேசத்திலிருந்து முழுமையாக பங்கு பெறுவது அவசியமாகும். அமல் ரீதியான அம்சத்தில் நீங்கள் முழுமை ஆகிவிடாத வரை இந்த நேசம் நிரூபணமாக முடியாது. வெறும் வாயால் இந்த விஷயம் நிரூபணமாகுவதில்லை.

ஒருவர் சர்க்கரையின் அல்லது கற்கண்டின் பெயரைச் சொன்னால் அதனால் வாய் இனித்து விடாது. இனிப்பின் பெயரை சொல்வதனால் மட்டும் வாய் இனித்து விடாது. இனிப்பின் பெயரைக் கூறுவதனால் ஒன்றும் வாய் இனித்து விடாது. ஒருவரிடம் நட்பு கொண்டிருப்பதாக ஒருவர் நாவால் சாட்சி பகர்கிறார். ஒப்புதல் அளிக்கிறார். இன்னல் மற்றும் துன்பமான நேரம் வரும்போது அவருக்கு உதவவில்லை என்றால், கைகொடுப்பதை விட்டும் விலகியிருந்தால் உண்மையான நண்பராக ஆக முடியாது.

இவ்வாறே அல்லாஹ்வின் ஓரிறைமை பற்றி நாவால் மட்டும் ஒப்புதல் கூறிவிட்டு அவன் மீதான நேசம் பற்றியும் நாவளவிலான ஒப்புதல் மட்டுமே இருக்கிறது என்றால், எந்தப் பலனும் கிடையாது. மாறாக இது நாவால் ஒப்புதல் கூறுவதற்குப் பதிலாக செயல் எனும் பங்கை அதிகம் எதிர்பார்க்கிறது. நாவால் ஒப்புதல் கூறுவது ஒன்றுமற்றது என்பது இதற்குப் பொருளல்ல.

அன்னார் (அலை) கூறினார்கள்: எனது நோக்கம் என்னவென்றால், நாவால் ஒப்புதல் கூறுவதுடன் சேர்த்து அமல் ரீதியிலான உண்மைப்படுத்துதல் அவசியமாகும். இதுவே இஸ்லாம் ஆகும். இந்த நோக்கத்திற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே இறைவன் இந்த நோக்கத்திற்காக ஓடச் செய்துள்ள அந்த நீரூற்றின் பக்கம் எவர் வருவதில்லையோ அவர் நிச்சயம் இழப்பிற்குரியவராக இருப்பார்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ்வின் ஓரிறைமையை நிலைநாட்டுவதற்காக உங்கள் வாழ்வை இப்படி அமைத்துக் கொள்ளுங்கள்.

ஒருவர் வாழ்வை அர்ப்பணித்து விட்டு ஜமாஅத்திற்குத் தொண்டாற்ற விரும்புகிறார் என்பது அவசியமல்ல. மாறாக, பொருள் என்னவென்றால், போதனைப்படி அமல் செய்வதற்காக உங்கள் வாழ்வுதனை அர்ப்பணித்து விடுங்கள். நம் வாழ்வு அல்லாஹ்வுக்காக இருக்கிறது என்பது வெளிப்படும் வண்ணம் அதை அமைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்வுதனை இவ்வாறு அமைத்துக் கொள்வீர்களாயின் அப்போதுதான் வெற்றி பெறுவீர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இதை உங்கள் வாழ்வின் நோக்கமாகப் புரிந்திடுங்கள். அதாவது, நாம் உலகை மட்டும் சம்பாதிக்கக் கூடாது.

மாறாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்து நாம் அல்லாஹ்வின் ஓரிறைமையை உலகில் நிலைநாட்டுவதற்கு, பரப்புவதற்கு இயன்ற எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். இந்த சிந்தனை இருக்கும்போது, ஜமாஅத் நபர் ஒவ்வொருவரும் தனது பங்களிப்பை செலுத்திக் கொண்டிருப்பார். அல்லாஹ்வின் ஓரிறைமையின் கொடியை உலகில் பறக்கச் செய்வதற்கும், உலகில் பரப்புவதற்கும் பெருமானார் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்கும் முயற்சி செய்து கொண்டிருப்பார்.

ஆக, இந்த ரமலானில் நாம் இறை வணக்கங்கள் பக்கம் கவனம் செலுத்துவோம். உயர் நல்லொழுக்கங்களின் பக்கம் கவனம் செலுத்துவோம். நன்மைகளை செய்வதன் பக்கம் கவனம் செலுத்துவோம். அல்லாஹ்வின் ஓரிறைமையைப் பரப்புவதன் பக்கம் கவனம் செலுத்துவோம் என்று நாம் உறுதி எடுத்துக் கொண்டுள்ள அதே வேளையில் பிறகு அதற்காக நாம் முயற்சியும் செய்ய வேண்டி வரும்.

மேலும், இந்த முயற்சி இந்த ரமலான் முடிவதுடன் மட்டும் முடிந்து விடக் கூடாது. மாறாக, ஆண்டு முழுவதும் தொடர வேண்டும். இது ஆண்டு முழுவதும் இருக்கும்போது பிறகே நாம் வாழ்வின் நோக்கமான அந்த நோக்கத்தைப் பெறக் கூடியவர்களாக ஆக முடியும். இது இல்லையென்றால், பிறகு இறைவனின் வழிகாட்டலின்படி, அவனது கட்டளையின்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையின்படி அமல் செய்தவாறு நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்திற்கு எந்த நோக்கமும் இருக்காது. நம்மால் அந்த நோக்கத்தைப் பெற முடியாது. அன்னாரின் பைஅத்தில் வருவதனால் நமக்குக் கிடைக்கக் கூடிய அந்த விஷயங்களால் நாம் பலன் பெற முடியாது.

எனவே நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயமாவது, நாம் பைஅத்தில் வந்து நம்மிடம் ஒரு சிறப்பான மாற்றத்தை உருவாக்க வேண்டும். இந்த ரமலானில் நாம் செய்த துஆக்களை நாம் பெற்ற நன்மைகளை வாழ்வு முழுவதும் அங்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

உலகவாதிகளைப் போன்று இருப்பீர்களாயின் அதனால் எந்தப் பலனும் ஏற்படாது. நீங்கள் எனது கையில் தவ்பா செய்துள்ளீர்கள். எனது கையில் தவ்பா செய்வது என்பது ஒரு மரணத்தை நாடுகிறது. இதன் மூலம் நீங்கள் புதிய வாழ்வில் இன்னொரு பிறப்பைப் பெறக் கூடும். பைஅத் உள்ளத்தால் இல்லையென்றால், அதற்கு எந்த விளைவும் கிடையாது. நீங்கள் என்னிடம் பைஅத் செய்வதன் மூலம் உள்ளத்தால் ஒப்புதல் இருக்க வேண்டும் என்று இறைவன் நாடுகின்றான்.

ஆக எவர் உண்மையான உள்ளத்துடன் என்னை ஏற்றுக் கொள்கிறாரோ, தன்னுடைய பாவங்களிலிருந்து உண்மையான முறையில் தவ்பா செய்கிறாரோ அவருடைய பாவங்களை, அதிகமாக பாவங்களை மன்னிக்கக் கூடியவனும், மேன்மேலும் கருணைகாட்டக் கூடியவனும் ஆகிய இறைவன் கண்டிப்பாக மன்னித்து விடுகின்றான். அவர் தாயின் வயிற்றில் இருந்து வந்தது போன்று ஆகி விடுகிறார். அப்பொழுது வானவர்கள் அவரைப் பாதுகாக்கின்றனர்.

அன்னார் (அலை) இவ்வாறு எடுத்துக்காட்டு வழங்கினார்கள்; ஒரு கிராமத்தில் ஒரு நல்ல மனிதர் இருக்கிறார் என்றால், அல்லாஹ் அவரது நன்மையைக் கருத்தில் கொண்டு அதற்காக அந்த கிராமத்தை அழிவிலிருந்து காப்பாற்றி விடுகின்றான்.

ஆனால், அழிவு வரும்போது பிறகு எல்லார் மீதும் விழுகிறது. ஆனால், பிறகும் அவன் தன் அடியார்களை ஏதாவது ஒரு விதத்தில் காப்பாற்றி விடுகின்றான். ஒருவர் கூட நல்லவர் என்றால், அவருக்காக மற்றவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள் என்பதே இறைவனின் நடைமுறையாகும்.

( மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 262, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே இன்றைய காலத்தில் இருக்கும் உலகின் நிலைமைகளில் நாம் குறிப்பாக நம்மைக் காப்பாற்றுவதற்கும், நம் வழித்தோன்றல்களைக் காப்பாற்றுவதற்கும் முயற்சி செய்யக் கூடிய அதே வேளையில், உலகத்தைக் காப்பாற்றுவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். ஓரிறைக் கொள்கையை உலகில் பரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மாநபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதே வேளையில் அதற்காக நாம் நம்மிடம் ஒரு சிறப்பான மாற்றத்தை நிரந்தரமாக உருவாக்க வேண்டி வரும். நிரந்தரமான துஆக்களை நம் வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டி வரும். அப்போதுதான் நாம் நம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். உலகத்தையும் பாதுகாப்பாக வைக்க முடியும். ஏனெனில், உலகம் மிக வேகமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அல்லாஹ் நாடினால், அவர்களுடைய உள்ளங்களைத் திருப்பி உலகின் சீர்திருத்தத்திற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும். இதனால் அந்த அழிவிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியும்.

அழிவு வர இருக்கின்றது என்றாலும் கூட பின்னர் அல்லாஹ் முஃமின்களை ; நம்பிக்கையாளர்களை அதிலிருந்து காப்பாற்றுவானாக! அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நாம் நம்முடைய அமல்களை இந்தக் கோணத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருள் என்றென்றும் நம் மீது இருக்கும் வகையில் நிறைவேற்ற வேண்டும்.

எவ்வாறு நாம் நம்முடைய இறை வணக்கங்களை உயிரோட்டத்துடன்

வைத்திருப்பது? எவ்வாறு நாம் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவது? எவ்வாறு நாம் இறையச்சத்தின்படி நடப்பது? எவ்வாறு நாம் உயர் நல்லொழுக்கத்தைக் காட்டுவது? எவ்வாறு நாம் ஓரிறைக் கொள்கையை உலகில் நிலை நாட்டுவது? எவ்வாறு நம்மை உலகின் அழிவிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றுவது? ஆகிய விஷயங்களின் உண்மையான புரிதலைப் பெறக் கூடியவர்களாகவும் நாம் ஆவோமாக!

இந்த விஷயங்கள் இருக்கும்போதுதான் நம்முள் இந்த உணர்வு ஏற்படும்போதுதான், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்துக்கான உரிமையையும் செலுத்தக் கூடியவர்களாக இருப்போம். நாம் இந்த பைஅத்துக்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இறைவன் நம்மை ஆக்குவானாக! இந்த ரமலான் நமக்கு அருள்களுக்குக் காரணமாக அமையட்டுமாக. நமக்குத் தன்னுடைய கருணைகள், அருள்கள் மற்றும் பரக்கத்துகளை வழங்கட்டுமாக!

ரமலானின் வரக்கூடிய நம்முடைய நாள்கள் முழு ஆண்டு மற்றும் அடுத்த ரமலான் வரை நாம் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக! அவனுடைய அடியார்களின் உரிமையையும் நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக! அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * * * * *

12-ம் பக்கம் தொடர்ச்சி...
(குத்பா பேருரை 4.4.25)

அவர்கள் எங்கள் சார்பாக சமாதானத்திற்கான செய்தியை கொண்டு வருவார்கள் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களால் ஃஹைபரை வெற்றி கொள்ள முடியாது என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்தான்.

அவர்கள் நாங்கள் ஆட்களை அனுப்புகின்றோம் என்று கூறியிருந்தனர்; ஆயினும், ஃஹைபரையோ வெற்றி கொள்ள முடியாது என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது.ஆக, அவர்கள் இவ்வாறு செய்து கொண்டிருந்தனர். இவ்வாறு சாக்குபோக்குகளை காலம் தாழ்த்திக் கொண்டிருந்தனர். ஆட்களை அனுப்புகிறோம்; என்று அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். எந்த அளவுக்கு என்றால் அவர்களிடத்தில் சிலர் வந்தார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் நாயிம் கோட்டையை வெற்றி கொண்டதாக அவர்களுக்கு செய்தி கொண்டு வந்திருந்தார்கள். அதை கேட்டு ஃபதக் மக்கள் பயந்து விட்டார்கள். அவர்கள் தம்முடைய தலைவர்களில் ஒருவரை ஒரு குழுவுடன் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அனுப்பி வைத்தார்கள். அந்த தலைவர் நூன் பின் யூஷஃப் என்று அழைக்கப்பட்டார். அவர் ஆஜராகி அன்னாரிடம், எங்களுடைய உயிர்கள் மன்னிக்கப்பட வேண்டும் ; நாங்கள் எங்களுடைய பொருள் மற்றும் செல்வத்தை எடுத்துக் கொண்டு ஃபதக் ஐ விட்டு சென்று விடுவோம். இவ்விஷயங்களில் எங்களுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள் என்று கோரிக்கை வைத்தார். அன்னார் (ஸல்) அந்த கோரிக்கையை ஒப்புக் கொண்டார்கள்.

ஓர் அறிவிப்பில், ஃபதக் மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சமரசம் செய்யும் போது, பாதி நிலங்களை அவர்களுக்காக விட்டு விட வேண்டும் என்றும், மீதமுள்ள பாதியை பெருமானார் (ஸல்) அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும் என்றும் சமரசம் செய்து கொண்டதாகவும் வருகிறது.

இந்த குடியிருப்பு போர் நடைபெறாமல் வெற்றி கொள்ளப்பட்டது. ஆகவே அந்த செல்வம் பெருமானார் (ஸல்) அவர்களின் உரிமையாக இருந்தது. ஏனெனில் இது ஃபே என்றழைக்கப்பட்ட போர்ச் செல்வமாக இருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஃபதக்கிலிருந்து கிடைத்த வருவாயிலிருந்து செலவு செய்து வந்தார்கள்.

ஃஹைபருடைய போர்ச் செல்வம் குறித்தும் அது பங்கிட்டு கொடுக்கப்பட்டது குறித்தும் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அபூ ஹூரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஃஹைபரை நோக்கி சென்றோம். ஃஹைபரில் எங்களுக்கு தங்கமோ, வெள்ளியோ கிடைக்கவில்லை. ஒட்டகங்களும், கால்நடைகளும், பொருட்களும், தோட்டங்களும் கிடைத்தன.

ஓர் அறிவிப்பில் வருகிறது: அங்கு கிடைத்த போர்ச் செல்வம், ஆடைகளாகவும், பொருட்களாகவும் இருந்தன. சில கோட்டைகளில் இருந்து கிடைத்த ஆயுதங்களின் விபரம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

ஓராயிரம் ஈட்டிகளும், 400 வாள்களும், 500 வில்களும் கிடைத்தன. பஷீர் பின் யஸார் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள், கைபரிலிருந்து கிடைத்தப் பொருட்களை 36 பங்குகளாக பிரித்தார்கள். அதில் பாதியை அதாவது 18 பங்குகளை (வருங்காலத்து தேவைகளை கருத்தில் கொண்டு) முஸ்லிம்களுக்காக ஒதுக்கி வைத்தார்கள். அவற்றுள் ஒவ்வொரு பங்கையும் நூறு பங்காக பிரித்தார்கள். அதாவது 1800 பங்காக அவை பிரிக்கப்பட்டன. அதில் இருந்த மற்ற பங்குகளை போன்று பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் ஒரு பங்கு இருந்தது. அதாவது மற்ற மக்களுக்கு இருந்த பங்கைப் போன்றே அன்னாருக்கும் இருந்தது.

குதிரை வீரருக்கு 3 பங்கு என்றும், காலாட்படை வீரருக்கு ஒரு பங்கும் இருந்ததாக ஓர் அறிவிப்பில் வருகிறது. மொத்த பங்கின் பாதியை வருங்கால தேவைகளுக்காகவும், விவகாரங்களுக்காகவும், முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டிய விஷயங்களுக்காகவும் ஒதுக்கி வைத்திருந்தார்கள்.

அது ரிசர்வ் ஃபண்டில் சேர்ந்திருந்தது. மேலும் இவை வ(த்)தீஹ், க(த்)தீபா மற்றும் சுலாலிம் ஆகிய பகுதியில் இருந்த கோட்டைகளிலிருந்த கிடைத்திருந்தன. அதாவது அங்கிருந்து கிடைத்த செல்வங்களாக இருந்தன.

ஓர் அறிவிப்பில் வருகிறது: க(த்)தீபாவில் இருந்து கிடைத்தவற்றில் அல்லாஹ்வுக்குரிய ஐந்தில் ஒரு பங்கும், நபி உடைய பங்கும், நெருங்கிய உறவினர்களின் பங்கும், அனாதைகள் மற்றும் ஏழைகளின் பங்கும், நபியுடைய தூய மனைவிகளின் செலவுகள் போன்றவையும் இருந்தது. அதேபோன்று, பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் ஃபதக் மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தர்களாக இருந்தவர்களுக்கும் அதிலிருந்து பங்கு கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் ஹஸ்ரத் முஹய்யிஸா பின் மஸ்வூது (ரலி) அவர்கள் ஆவார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அதிலிருந்து அவருக்கு முப்பது வஸக் மாவும், 30 வஸக் பேரிச்சபழமும் கொடுத்தார்கள். ஒரு வஸக்-ல் 60 ஸாஃ இருக்கும். ஒரு சாஃ என்பது குறைந்தபட்சம் 2 1/2 கிலோவாக இருந்தது. இவ்வாறு அதில் ஏறக்குறைய 4500 கிலோ மாவும், 4500 கிலோ பேரிச்சம்பழமும் இருந்தது. ஹூதைபியா சமாதானத்தில் எவர்களெல்லாம் கலந்து கொண்டார்களோ அவர்களுக்கு மட்டுமே ஃஹைபருடைய போர் செல்வம் பொதுவாக பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஆயினும், விதிவிலக்காக அவர்களை தவிர ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களுக்கும் பங்கு கொடுக்கப்பட்டது. அதேபோன்று அபிஸீனியாவிலிருந்து திரும்ப வந்திருந்த ஹஸ்ரத் அபூஹூரைரா (ரலி) போன்ற சில மக்களுக்கும் போர் செல்வத்திலிருந்து கொடுக்கப்பட்டது.

ஓர் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்களுக்கான ஐந்தில் ஒரு பங்கிலிருந்து ஆயுதங்கள், ஆடைகள் போன்றவை வாங்கப்பட்டன. அதில் இருந்து அஹ்லே பைத் அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தாருக்கும், பனூ முத்தலிபுக்கும் கொடுக்கப்பட்டன. மேலும் அவர்களின் அனாதைப் பெண்களுக்கும் கொடுக்கப்பட்டன. மேலும் யாசகர்களுக்கும் கொடுக்கப்பட்டன.

ஃஹைபரின் போர்ச் செல்வங்களை பங்கிட்டு கொடுப்பதை கண்காணிப்பவராக ஜப்பார் பின் சக்ர் அன்ஸாரி இருந்தார்கள். இவர்கள் பனூ ஸல்மாவைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மேலும் ஸைத் பின் ஸாபித் அவர்களும் இருந்தார்கள். இவர்கள் பனூ நஜ்ஜாரை சேர்ந்தவராக இருந்தார்கள். இவர்கள் இருவரும் கணக்கு வழக்கு பார்த்து பங்கிட்டு கொடுக்கக் கூடியவர்களாக இருந்தார்கள் என்று இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதி இருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் போர்ச் செல்வங்களை ஒன்று திரட்டுமாறு கட்டளையிட்டார்கள். ஆகவே அது ஒன்று திரட்டப்பட்டது. ஃபர்வா பின் பயாஸி அவர்களை அதற்கு கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அதை கணக்கெடுக்கும் பொறுப்பை ஸைது பின் ஸாபித் அவர்களிடத்தில் ஒப்படைத்தார்கள் என்று இப்னு ஸஅது அவர்கள் எழுதி இருக்கின்றார்கள்.

தமக்கு ஓர் உணவுப்பை கிடைத்ததாக அப்துல்லாஹ் பின் முகஃபல் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இன்னோர் அறிவிப்பில் வருகிறது: அந்த உணவுப் பையில் கொழுப்பு நிறைந்திருந்தது. அதிலிருந்து நான் எவருக்கும் ஒன்றும் கொடுக்க மாட்டேன் என்று கூறிக் கொண்டேன். நான் அன்னாரை கடந்து செல்லும்போது வெட்க உணர்வின் காரணமாக நான் அதை எனது கை இடுக்கில் மறைத்து வைத்துக் கொண்டு என் தோழர்களை நோக்கி செல்லும்போது போர் செல்வத்தை கண்காணித்து கொண்டிருந்தவர் வழியில் என்னை கண்டார்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)**

தமிழாக்கம்
மவ்லவி A.P.A.தாரிக் அஹ்மது

* * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**ஃஹைபர் போர் படை மற்றும் வாதியுல் குரா போர் படையின் பின்னணியின் ஒளியில்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாறு**

பெருமானார் (ஸல்) அவர்கள் அபிஸீனிய முஹாஹிர்கள் ஃஹைபர் போர் சந்தர்ப்பத்தின் போது திரும்பி வந்தடைந்தபோது.

مَا أَدْرِي بِأَيِّهِمَا أَنَا أُسَرُّ: بِفَتْحِ خَيْبَرَ، أَمْ بِقُدُومِ جَعْفَرٍ

என்று கூறினார்கள். அதாவது, ஃஹைபரை வெற்றி கொண்டதன் காரணமாகவோ அல்லது ஜஃபருடைய வருகையின் காரணமாகவோ - இந்த இரு விஷயங்களில் எந்த விஷயத்திற்காக நான் அதிக மகிழ்ச்சி அடைந்துள்ளேன் என்று தெரியவில்லை என்றார்கள்.

ஓர் அபிஸீனிய அடிமை முஸ்லிமானார். பிறகு அவர் ஷஹாதத்தையும் அடைந்தார். அதைப் பற்றிய குறிப்பு இங்கு காணக் கிடைக்கின்றது

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னுடைய நிறமோ கருப்பாக உள்ளது; என்னுடைய முகமோ அழகற்றதாக உள்ளது. துர்நாற்றம் உடையவனாக நான் இருக்கின்றேன். என்னிடத்தில் எந்த செல்வமும் கிடையாது. நான் அம்மக்களுடன் போர் செய்து கொல்லப்பட்டால் நான் சொர்க்கத்திற்குள் நுழைவேனா? என்று கேட்டார். ஆம்! சொர்க்கத்தில் நுழைந்து விடுவீர்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த ஆடுகள் என்னிடத்தில் அமானிதமாக உள்ளன. இவற்றை நான் என்ன செய்வது? பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: படையை விட்டு வெளியே கொண்டு சென்று அவற்றை திறந்த வெளியில் விட்டு விடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் உமது அமானிதத்தை உம் சார்பாக செலுத்தி விடுவான். அதாவது இந்த ஆடுகளை அவர்கள் வரை கொண்டு சேர்த்து விடுவான் என்றார்கள்

ஃஹைபரின் போர்ச் செல்வங்களை பங்கிட்டு கொடுப்பதை கண்காணிப்பவராக ஜப்பார் பின் சக்ர் அன்ஸாரி இருந்தார்கள். இவர்கள் பனூ ஸல்மாவைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மேலும் ஸைத் பின் ஸாபித் அவர்களும் இருந்தார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 மே 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **04 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ரமலானுக்கு முன்பு போர் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்ட போது, பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை எடுத்துரைக்கப்பட்டது. ஃஹைபர் போர் சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இன்றும் நான் இது தொடர்பாகவே கொஞ்சம் எடுத்துரைப்பேன். அந்நாட்களில் ஃஹைபர் வெற்றியின் மகிழ்ச்சியுடன் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இன்னொரு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அதைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்போது, ஃஹைபர் வெற்றியால் எனக்கு மிக அதிக மகிழ்ச்சி ஏற்பட்டதா? அல்லது இந்த விஷயத்தால் ஏற்பட்டதா? என்று என்னால் விவரிக்க இயலவில்லை என்றார்கள். அது, அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றவர்களுடன் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் அபிஸீனியாவிலிருந்து திரும்பி வந்த சம்பவம் ஆகும்.

நாம் அறிந்தது போன்று, மக்காவாசிகள் அநீதி மற்றும் துன்பங்களை பொறுத்துக் கொள்ள இயலாமல் அங்கிருந்து சில முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து அபிஸீனியாவிற்கு சென்றிருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரருடைய மகன் ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் உமையா ஸம்ரீ (ரலி) அவர்களிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து நஜாஷி அரசனிடத்தில் கொடுக்குமாறு கூறி அபிஸீனியாவிற்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அந்தக் கடிதத்தில், இப்பொழுது அங்கு எத்தனை முஸ்லிம் முஹாஜிர்கள் எஞ்சி இருக்கிறார்களோ அவர்களை என்னிடத்தில் மதீனாவுக்கு அனுப்பி வையுங்கள் என்று எழுதி இருந்தார்கள். ஆகவே வேறொரு நாட்டில் 14,15 வருட காலகட்டத்தை கழித்த பிறகு இம்மக்கள் இரு கப்பல்களில் பயணித்து மதீனா வந்தடைந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஃஹைபர் நோக்கி சென்றிருக்கின்றார்கள் என்று அவர்களுக்கு தெரிய வந்தபோது அன்னாரை விரைவிலும் விரைவாக சந்திக்கும் துடிப்புடன் மதீனாவில் தங்கி இருப்பதற்கு பதிலாக அம்மக்கள் நிம்மதியற்று ஃஹைபரை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களை கண்டபோது, எழுந்து நின்று கட்டி அணைத்தார்கள்; இரு கண்களுக்கு இடையில் நெற்றியில் முத்தமிட்டார்கள். மேலும்

مَا أَدْرِي بِأَيِّهِمَا أَنَا أُسَرُّ: بِفَتْحِ خَيْبَرَ، أَمْ بِقُدُومِ جَعْفَرٍ

என்று கூறினார்கள். அதாவது, ஃஹைபரை வெற்றி கொண்டதன் காரணமாகவோ அல்லது ஜஃபருடைய வருகையின் காரணமாகவோ - இந்த இரு விஷயங்களில் எந்த விஷயத்திற்காக நான் அதிக மகிழ்ச்சி அடைந்துள்ளேன் என்று தெரியவில்லை என்றார்கள். ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களும் தம் சமுதாயத்தின் ஐம்பதையும் விட அதிக நபர்களுடன் வந்தடைந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களின் பெயர் அப்துல்லாஹ் பின் கைஸ் ஆக இருந்தது. இவர்கள் அஷ்அரீ எனும் கோத்திரத்தை சார்ந்தவர்களாக இருந்தார்கள். இவர்கள் தம் சமுதாயத்தின் சில மக்களுடன் மக்காவுக்கு வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு திரும்ப தன் சமுதாயத்திடம் சென்று விட்டார்கள். பிறகு கொஞ்ச காலத்திற்குப் பிறகு தம் இரு சகோதரர்களுடனும், தம் சமுதாயத்தைச் சார்ந்த சுமார் 50 நபர்களுடன் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்வதற்காக கடல் வழி பயணத்தில் புறப்பட்டிருந்தார்கள். ஆனால், பயணத்தின் போது புயல் வீசியதன் காரணமாக அவர்களின் கப்பல் அபிஸீனிய கடலோரப் பகுதியில் ஒதுங்கியிருந்தது. அபிஸீனியாவில் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். ஆகவே ஹஸ்ரத்


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India.
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com



நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களும் அங்கே தங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் மதீனாவை நோக்கி புறப்படுவதற்காக ஆயத்தமான போது, அஷ்அரீ கோத்திரத்தைச் சேர்ந்த இரு முஸ்லிம்களும் சேர்ந்து கொண்டார்கள். இவர்களுடன் தவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்த சில மக்களும் சேர்ந்து கொண்டார்கள். அவர்களுள் ஹஸ்ரத் அபூஹுரைரா, துஃபைல் பின் அம்ர் மற்றும் அவர்களுடைய தோழர்களும் இருந்தார்கள். அஷ்ஜஃ கோத்திரத்தைச் சார்ந்த சில மக்களும் வந்து சேர்ந்து கொண்டார்கள். அங்கு வந்திருந்த இந்த அனைத்து மக்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகைபர் போர் செல்வத்திலிருந்து கொஞ்சமாவது கொடுத்திருந்தார்கள்.

(ஸீரத் என்ஸைக்லோபீடியா, தொகுதி 8, பக்கம் 402 - 404, தாருஸ்ஸலாம்)

கப்பலில் பயணம் செய்து வந்தவர்களின் மேன்மை தொடர்பாகவும் மேற்கொண்டு இவ்வாறு விவரம் காணக் கிடைக்கின்றது. ஹஸ்ரத் ஜஃபர் மற்றும் அவர்களுடன் வந்திருந்த மற்ற முஸ்லிம்கள் கப்பலில் பயணம் செய்து வந்தடைந்து இருந்தார்கள். ஆகவே அவர்கள் அஸ்ஹாபே ஸஃபீனா -கப்பல்வாசிகள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மதீனா வந்தடைந்தபோது 15 ஆண்டு கால கட்டம் கடந்திருந்தது. இங்கிருந்த முஹாஜிர் முஸ்லிம்களோ பல போர்களில் கலந்து கொண்டிருந்தார்கள். (மதீனாவுக்கு) ஹிஜ்ரத் செய்வதிலும் முந்தி இருந்தார்கள். ஆகவே தாம் அவர்களை விட மேன்மையானவர்கள் என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். அதாவது அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றிருந்தவர்களை விட பெருமானார் (ஸல்) அவர்களுடன் இங்கு மதீனாவுக்கு வந்த முஸ்லிம்கள் மேன்மையானவர்கள் என்று பேசிக் கொண்டதாக தெரிய வருகிறது. ஒருமுறை ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களின் மனைவி ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை சந்திப்பதற்காக வந்திருந்தார்கள்.

அங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் சென்றிருந்தார்கள். அப்போது, இந்தப் பெண்மணி யார்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அஸ்மா பின்த் உமைஸ் ஆவார்கள் என்று ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்படியா! அபிஸீனியாவிலிருந்து கடல் மார்க்கமாக பயணம் செய்து வந்த பெண்மணியா?என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஆம்! என்று அதற்கு அஸ்மா (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.


Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


அதற்கு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நாங்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதில் உங்களை விட முந்திக் கொண்டோம். ஆகவே உங்களைக் காட்டிலும் நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அதிக நெருக்கமுடையவர்கள் ஆவோம் என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுக்கு வருத்தமும், கோபமும் ஏற்பட்டது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு ஒருபோதும் கிடையாது. உங்களைப் போன்ற மக்களோ பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்துள்ளீர்கள். உங்களில் பசித்தோருக்கு அன்னார் உணவளித்தார்கள். உங்களில் குறைமதியுடையோருக்கு அன்னார் அறிவுரை கூறி இருக்கின்றார்கள். ஆனால், நாங்களோ எங்களுடைய நாட்டை விட்டு தொலை தூரத்தில் வேறொரு எதிரி நாட்டில் இருந்தோம். அங்கு எங்களுக்கு பலவிதமான அச்சங்கள் ஏற்பட்டன. நாங்கள் இந்த அனைத்து துன்பங்களையும் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுக்காக பொறுத்துக் கொண்டோம். இறைவன் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் இதைக் குறித்து கேட்காத வரை நான் உணவு உண்ண மாட்டேன்; எந்த அளவு தாங்கள் கூறினீர்களோ அதே அளவுதான் நான் பேசுவேன். அதை குறைக்கவும் மாட்டேன்; கூட்டவும் மாட்டேன். அன்னாரிடம் சென்று முழு விஷயத்தையும் கூறுவேன் என்று ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இந்த அனைத்து விஷயங்களையும் எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்ட அன்னார் (ஸல்),

لَيْسَ بِأَحَقَّ بِي مِنْكُمْ، وَلَهُ
وَلِأَصْحَابِهِ هِجْرَةٌ وَاحِدَةٌ،
وَلَكُمْ أَنْتُمْ أَهْلَ السَّفِينَةِ هِجْرَتَانِ

என்று கூறினார்கள்.

அவர்கள் உங்களை விட அதிக உரிமை கொண்டவர்கள் கிடையாது. மாறாக, அவருக்கும், அவருடைய தோழர்களுக்கும் ஒரு ஹிஜ்ரத் என்றால் உங்களுக்கு அதாவது அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்த, கப்பலில் பயணம் செய்த உங்களுக்கு இரண்டு ஹிஜ்ரத்துகள் ஆகும் என்று கூறினார்கள். இவ்வாறு கூறி அன்னார் (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் வழங்கினார்கள். இதனால் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களின் கவலை நீங்கியது. ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் இதைக் கேட்டபோது, பெருமை மற்றும் நற்பேறு ஆகியவற்றின் இந்த சிறப்பை தம் தோழர்களிடம் எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு, அபிஸீனியாவிலிருந்து வந்திருந்த அந்த மக்கள் கூட்டம் கூட்டமாக என்னிடத்தில் வருவார்கள்.





Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india


மிக ஆர்வத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய இந்த அருளுக்குரிய கூற்றை என் மூலமாக கேட்டறிவார்கள். அம்மக்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களின் விஷயம் எந்த அளவு மகிழ்ச்சியை தந்தது என்றால், உலகில் எந்தவொரு விஷயமும் அவர்களுக்கு இந்த அளவு மகிழ்ச்சியை தந்தது கிடையாது. உலகில் எந்த ஒரு விஷயமும் இந்த அளவு பெருமைக்குரிய விஷயமாக அவர்களுக்கு இருந்ததில்லை.

சில மக்களோ பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றை என்னிடம் இருந்து கேட்பதற்காக மீண்டும், மீண்டும் வருவார்கள் என்று ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்.

ஓர் அபிஸீனிய அடிமை முஸ்லிமானார். பிறகு அவர் ஷஹாதத்தையும் அடைந்தார். அதைப் பற்றிய குறிப்பு இங்கு காணக் கிடைக்கின்றது. அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: யஸார் எனும் ஓர் அபிஸீனிய அடிமை ஃகைபர் வாசி ஒருவருடைய ஆடுகளை மேய்த்து வந்தார். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக ஃகைபர் வாசிகள் ஆயுதம் ஏந்தியதை கண்டபோது, அவர் ஃகைபர் வாசிகளிடம், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர்கள் தம்மைத் தாமே நபி என்று கூறிக் கொண்டிருக்கும் ஒருவருடன் நாங்கள் போர் செய்ய போகிறோம் என்றார்கள். அதைக் கேட்டபோது அவருடைய உள்ளத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் நினைவு குடி கொண்டுவிட்டது. அதாவது நபி என்று வாதிக்கிறார் என்றால் நிச்சயமாக ஏதேனும் ஒரு விஷயம் இருக்கும் என்று பெருமானார் (ஸல்) அவர்களின் அந்தஸ்து அவரது உள்ளத்தில் குடிகொண்டு விட்டது. அவர் தன் ஆடுகளை மேய்ப்பதற்காக ஓட்டிச் சென்றார். முஸ்லிம்கள் அவரைப் பிடித்து அன்னாரிடம் கொண்டு வந்தனர்.

இன்னோர் அறிவிப்பில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. அது என்னவென்றால், அந்த அடிமை ஆடுகளை மேய்த்தவாறு பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார். அன்னார் (ஸல்) அவரிடம் பேசினார்கள். தாங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்கள்? என்று அந்த அடிமைக் கேட்டார். நான் உம்மை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கின்றேன். அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்றும், நான் அல்லாஹ்வுடைய தூதராக உள்ளேன் என்றும் நீர் சாட்சி கூறவேண்டும். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். நான் இவ்வாறு சாட்சி கூறிவிட்டால் எனக்கு என்ன கிடைக்கும்? என்று அந்த அடிமைக் கேட்டார். அதற்கு பெருமனார் (ஸல்) அவர்கள், நீர் இவ்விஷயங்கள் மீது நம்பிக்கை கொண்டால் உமக்கு சொர்க்கம் கிடைக்கும் என்றார்கள். ஆகவே அந்த அடிமை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னுடைய நிறமோ கருப்பாக உள்ளது; என்னுடைய முகமோ அழகற்றதாக உள்ளது. துர்நாற்றம் உடையவனாக நான் இருக்கின்றேன். என்னிடத்தில் எந்த செல்வமும் கிடையாது. நான் அம்மக்களுடன் போர் செய்து கொல்லப்பட்டால் நான் சொர்க்கத்திற்குள் நுழைவேனா? என்று கேட்டார். ஆம்! சொர்க்கத்தில் நுழைந்து விடுவீர்! என்று அன்னார் (ஸல்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

*Weekly* **BADAR** *Qadian*

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 08 MAY 2025 Issue No 19

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கூறினார்கள். அந்த அபிஸீனிய அடிமை கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த ஆடுகள் என்னிடத்தில் அமானிதமாக உள்ளன. இவற்றை நான் என்ன செய்வது? பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: படையை விட்டு வெளியே கொண்டு சென்று அவற்றை திறந்த வெளியில் விட்டு விடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் உமது அமானிதத்தை உம் சார்பாக செலுத்தி விடுவான். அதாவது இந்த ஆடுகளை அவர்கள் வரை கொண்டு சேர்த்து விடுவான் என்றார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்கள் போர்ச் செல்வங்களை கைப்பற்றுவதற்காக போர் புரிந்தார்கள் என்று அன்னாரின் மீது ஆட்சேபனை செய்யப்படுகின்றது. குறிப்பாக ஃகைபர் போர் தொடர்பாக இந்த ஆட்சேபனை எழுப்பப்படுகின்றது. யூதர்களின் செல்வங்களை தகாத முறையில் கைப்பற்றுவதற்காக இந்த அநீதி இழைக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்த விஷயம் சரியானது அல்ல. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எதிரியின் ஆட்டு மந்தை ஒன்று முஸ்லிம்களின் கையில் கிடைக்கின்றது. அப்பொழுது ஸஹாபிகளின் நிலையோ எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், பசியால் அவர்கள் களைப்படைந்து போயிருந்தார்கள். சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்கவில்லை. இந்த ஆடுகளோ இலவசமாக கிடைத்த போர்ச் செல்வமாக இருந்தது. அதை பயன்படுத்தி இருக்கலாம். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் போரிலும் கூட அமானிதத்தின் உரிமையை செலுத்தியவாறு ஆடுகளை திரும்ப ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார்கள்.

எவ்வாறிருப்பினும், அந்த அடிமை அவ்வாறே செய்தார். அந்த ஆடுகள் ஒன்றாக சேர்ந்து சென்றன. யாரோ ஓட்டி செல்வதைப் போன்று அவை சென்று கொண்டிருந்தன. எந்த அளவுக்கு என்றால், ஒவ்வோர் ஆடும் தம் எஜமானரை சென்றடைந்து விட்டது. பிறகு அந்த அடிமை போரில் கலந்து கொண்டார். எந்த அளவுக்கு என்றால், அம்பு ஒன்று அவர் மீது குத்தியது. அவர் ஷஹீது ஆகிவிட்டார். அவர் ஒரு ஸஜ்தா கூட செய்திருக்கவில்லை. இப்போதுதான் புதிதாக முஸ்லிமாக ஆகி இருந்தார். எந்த ஒரு தொழுகையும் தொழுதிருக்கவில்லை. முஸ்லிம்கள் அவரை தூக்கிக் கொண்டு தம் படைக்கு கொண்டு வந்தார்கள். இவரை கூடாரத்திற்கு கொண்டு வாருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஸஹாபிகள் அந்த அடிமையை பெருமானார் (ஸல்) அவர்களின் கூடாரத்திற்குள் கொண்டு சென்றார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவரிடத்தில் அன்னார் சென்றார்கள். அவர் ஷஹீதாகி இருந்தார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் உமது முகத்தை அழகானதாக ஆக்கி விட்டான். உமது துர்நாற்றத்தை நறுமணமாக ஆக்கிவிட்டான். உமது செல்வத்தை அதிகமாக்கி விட்டான்.

அவருக்காக அன்னார் (ஸல்) துஆ செய்தார்கள். அல்லாஹ்வோ இவரை சொர்க்கத்திற்கு கொண்டு சேர்த்து விட்டான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

ஃகைபர் முற்றுகையிடப்பட்ட நாட்களில் ஒரு யூதத் தலைவரின் ஆடுகளை மேய்த்து வந்த ஒருவர் முஸ்லிமாகி விட்டார். அவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இப்பொழுது என்னால் அந்த யூதர்களிடம் செல்ல முடியாது. அந்த யூதருடைய இந்த ஆடுகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களாக இருக்கின்றன. இப்பொழுது நான் அவற்றை என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். இதற்கு அவர்கள், இந்த ஆடுகளின் முகங்கள் அந்த கோட்டையை நோக்கி இருக்குமாறு செய்து, அவற்றை விரட்டி விடுங்கள். இறைவன் அவற்றை அவற்றின் உரிமையாளரிடம் (கொண்டு) சேர்த்து விடுவான் என்று கூறினார்கள். எனவே அவர் அவ்வாறு செய்தார். ஆடுகள் அந்தக் கோட்டைக்குப் பக்கத்தில் சென்றன. கோட்டையில் உள்ளவர்கள் அவற்றை அங்கிருந்து உள்ளே கொண்டு சென்றனர்.
(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20, பக்கம் 327)

ஃகைபர் போரின் போது சில மார்க்கச் சட்ட விவகாரங்கள் தொடர்பான சம்பவங்களும் காணக் கிடைக்கின்றன. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகைபர் நாளில் நாட்டுக் கழுதையின் இறைச்சியை உண்ணுவதை தடை செய்தார்கள்.
(ஸஹீஹ் புகாரீ, கிதாபுஸ் ஸபாயிஹ், ஹதீஸ் எண்: 5523)

அதேபோன்று புஹாரி உடைய ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஃகைபர் போரின்போது, முத்அத்துன்னிஸா (கால வரம்பிட்டுச் செய்யப்படும் திருமணம்) ஆகியவற்றையும் தடை செய்தார்கள்.

ஃபதக் எனும் இடத்தைச் சார்ந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் சமரசம் செய்து கொண்ட குறிப்பும் காணக் கிடைக்கின்றது. ஃபதக் மதீனாவில் இருந்து ஆறு இரவு பயணத் தொலைவில் ஃகைபருக்கு அருகில் அமைந்துள்ளது.
( ஃபரஹங் ஸீரத், பக்கம் 225, ஸவார் அகாடமி, கராச்சி)

பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகைபரை நோக்கி புறப்பட்டு அதற்கு அருகில் சென்றடைந்த போது அன்னார் (ஸல்) முஹய்யிஸா பின் மஸ்வூது என்பவரை ஃபதக் ஐ நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுங்கள்; உங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுங்கள் என்றார்கள். ஏனெனில், அவர்களும் விஷமத்தனங்கள் செய்வதில் மிகவும் முன்னேறி இருந்தார்கள் அல்லது ஏதாவது ஒரு வகையில் முஸ்லிம்களுக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார்கள் அல்லது எவ்வாறான விஷயத்தை பேசி வந்தார்கள் என்றால் அதனால் ஏதாவது ஒரு வகையில் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஃகைபர் வாசிகள் மீது நாங்கள் தாக்குதல் நடத்துவதைப் போன்று உங்கள் மீதும் தாக்குதல் நடத்தலாம் என்று அவர்களிடம் கூறுங்கள்.


ஹஸ்ரத் முஹய்யிஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அவர்களிடத்தில் சென்றேன். அவர்களிடத்தில் இரண்டு நாட்கள் தங்கி இருந்தேன். ஆனால், அவர்களோ காலம் தாழ்த்திக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் கூறினர்: ஃகைபரில் பத்தாயிரம் போராளிகள் இருக்கின்றார்கள். அவர்களுள் ஆமிர், யாசிர், ஹாரிஸ் மற்றும் யூதத் தலைவரான மர்ஹப் போன்ற வீரர்களும் இருக்கிறார்கள். முஹம்மது (ஸல்) அவர்களால் இம்மக்கள் வரை சென்றடைய முடியும் என்று எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

ஹஸ்ரத் முஹய்யிஸா (ரலி) கூறுகிறார்கள்: நான் அவர்களின் விஷமத்தனத்தையும், பிடிவாதத்தையும் கண்டபோது திரும்பிச் செல்வது என்று முடிவெடுத்தேன். பிறகு அந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்னிடம் வந்து நாங்கள் தங்களுடன் எங்களுடைய சில ஆட்களை அனுப்பி வைக்கிறோம்.

இதன் தொடர்ச்சி....9-ம் பக்கம்

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad